DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave. East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாராந்த செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703
உதயம் 1273
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday August 28, 2020



# கனடாவில் பாடசாலைகளை பாதுகாப்பாக மீளத் திறக்க பெரும் நிதி உதவிகளை அறிவித்த கனடியப் பிரதமர்

## ஒன்றாரியோ மாகாணத்திற்கு 763 மில்லியன் டொலர்கள்

கோவிட்-19 உலகத் தொற்றுநோய் காரணமாகப் பாடசாலைகள் மூடப்பட்டும், பிள்ளைகள் சக மாணவர்களிடம் இருந்தும், நண்பர்களிடம் இருந்தும் பிரிக்கப்பட்டும் இருந்தமை, குடும்பங்களுக்குச் சிரமமாக இருந்தது. பாதுகாப்பாகவும் படிப்படியாகவும் பொருளாதார நடவடிக்கைகளை நாம் மீள ஆரம்பிக்கும் வேளையில் பெற்றோர் வேலைக்குத் திரும்பக்கூடியதாக இருப்பதும், பிள்ளைகள் ஆரோக்கியமான சூழலில் கல்வி கற்கிறார்களென்ற நம்பிக்கையைக் கொண்டிருப்பதும் முக்கியமானது. இதற்காகவே பாடசாலைகளைப் பாதுகாப்பாக மீளத் திறப்பது, மாணவர்களினதும் பணியாளர்களினதும் உடல் நலத்தைப் பாதுகாப்பது ஆகியவற்றை உறுதி செய்வதற்கு மாகாணங்களும் பிராந்தியங்களும் எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவாகக் கனேடிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாதுகாப்பாக வகுப்புக்களுக்குத் திரும்புவதற்கான நிதியத்தின் ஊடாக மாகாணங்களுக்கும், பிராந்தியங்களுக்கும் 2 பில்லியன் டொலர் உதவி வழங்கப்படுமெனப் பிரதம மந்திரி ஜஸ்ரின் ட்ரூடோ நேற்று வியாழக்கிழமை அறிவித்தார்.

கல்வியாண்டு முழுவதும் மாணவர்களினதும், பணியாளர்களினதும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உள்ளூர் பாடசாலைச் சபைகளுடன் இணைந்து செயற்படும் மாகாணங்களுக்கும் பிராந்தியங்களுக்கும் தேவையான மேலதிக நிதியாக இது அமையும். உதாரணமாக, மாகாணங்களும் பிராந்தியங்களும் கல்வி கற்பதற்கான வேறிடங்களைப் பெற்றுக் கொள்வது, காற்றுச் சுற்றோட்டத்தை மேம்படுத்துவது, கைகளைத் தூய்மைப்படுத்துவதையும் சுகாதாரத்தையும் அதிகரிப்பது, தனி-நபர் பாதுகாப்புக் கருவிகளையும் துப்பரவாக்கும் பொருட்களையும் கொள்வனவு செய்வது போன்றவற்கு இது உதவியாக இருக்கும். இந்த இலையுதிர் காலத்தில் மாணவர்கள் பாதுகாப்பாகப் பாடசாலைகளுக்குத் திரும்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஒன்றாரியோ மாகாணத்திற்கு 763 மில்லியன் டொலர் வரையான பணம் புதிய நிதியுதவியில் கிடைக்கும். இரண்டு கட்டங்களாக இந்தப் பணம் வழங்கப்படும்.

பூர்வகுடிக் குடியிருப்புக்களில் உள்ள பாடசாலைகளுக்கு மாணவர்கள் பாதுகாப்பாகத் திரும்புவதை உறுதி செய்வதற்கான சமூக செயற்பாடுகளுக்கு உதவியாக மேலதிகமாக 112 மில்லியன் டொலர் பூர்வகுடியினருக்கு வழங்கப்படுமெனவும் பிரதம மந்திரி அறிவித்தார். இந்தக் கல்வியாண்டில் மாணவர்களினதும், பணியாளர்களினதும் உடல் நலத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்குப் பூர்வகுடிப் பங்காளிகளுடன் அரசு தொடர்ந்து இணைந்து பணியாற்றும். எமது பாடசாலைகளை மீளத் திறந்து, பொருளாதார செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்கும் வேளையில், அனைத்துக் கனேடியர்களினதும் உடல்நலத்தையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காக மாகாணங்களுடனும், பிராந்தியங்களுடனும் இணைந்து செயற்படுவதுடன் வழிகாட்டியாகவும் நாம் தொடர்ந்து செயற்படுவோம்.

”முன்னாள் ஆசிரியராகவும், ஒரு தந்தையாகவும், பிள்ளைகளின் சமூகவியல் வளர்ச்சி, மனநலன், கல்வி கற்கும் வல்லமை ஆகியவற்றில் பாடசாலைகளின் முக்கியத்துவம் குறித்து நான் நேரடியாக அறிந்துள்ளேன். பிள்ளைகள் பாடசாலைகளுக்குத் திரும்புவது, பொருளாதார செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதில் ஒரு முக்கிய கட்டமாகவும், பெற்றோர் பிள்ளைககளின் உடல்நலம் குறித்துக் கவலையின்றி வேலைக்குத் திரும்புவதற்கும் முக்கியமானது. இந்தக் கடினமான வேளையில், பிள்ளைகள், குடும்பங்கள் மற்றும் அனைத்துக் கனேடியர்களையும் பாதுகாப்பாகவும், உடல்நலத்துடனும் பேணும் விடயத்தில் மகாணங்கள், பிராந்தியங்கள், பூர்வகுடியினர் ஆகியோரின் நெருக்கமான பங்காளியாகக் கனேடிய அரசு விளங்கும்.” எனப் பிரதம மந்திரி ஜஸ்ரின் ட்ரூடோ கூறினார்.

**எதிர்வரும் ஞாயிறு 30ம் திகதி காலை பிறம்ரன் மாநகரத்தில் இருந்து ஒட்டாவா பாராளுமன்றத்தை நோக்கிய நீதிக்கான நெடும் பயணத்திற்கு எமது மக்களின் ஆதரவு அவசியம்.**

**சிங்கள அரசால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது தாயக உறவுகளுக்காக நீதி கேட்போம்! அயராது போராடுவோம்!!**

(உள்ளே விபரமான செய்தி)

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 — 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905 794 4404

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

உங்கள் இல்லங்கள் அல்லது பண்ணை வீடுகள் ஆகியவற்றில் அழகிய முறையில் திருத்த வேலைகளைச் செய்து கொள்ள எம்மை அழையுங்கள்
Interior: Staircase Refinishing/Installation - Flooring Refinishing /Installation
Bathroom/Kitchen/Basement Renovations Additions & Extensions
Exterior : Fence/Interlock/Deck.
ZY RENOVATION
ZY-Renovation Call: Ethan @ 647 995 5955

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க...
மோகன் சுப்பிரமணியம்
Broker of Record / President
Direct Line: 416-321-2300 Office: 416-291-3000
6888 14th Avenue, Markham ON Independently owned and operated
PROPERTY MAX

# MORTGAGE SOLUTIONS

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

www.mortgageSolutions.ca

MONTHLY SAVING $2,478

SAVE UPTO 75% REFINANCE



KIRUBA THANABALASINGHAM

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## வேலைக்கு ஆட்கள் தேவை

பகுதிநேரமாக வேலைசெய்வதற்கு ஆட்கள் தேவை.

சம்பளம்: $16 /hour

Call
(416) 520-4746

## SPOKEN ENGLISH

100% உத்தரவாதம்!
ஆங்கிலம் எதுவும் கதைக்கமுடியாதவர்கள் 2 மாதத்தில் சரளமாக பேச முடியும்
Letter writing, Essay writing, Citizenship exam preparation மற்றும் IELTS preparation.
நம்பிக்கையுடன் அழையுங்கள்

துஸ்யந்தி:
(647) 606-1009

## பராமரிப்பாளர் தேவை

பிரம்ரன் நகரில் உள்ள வீடொன்றில் 81 வயதுடைய பெண்மணியை, வீட்டில் தங்கியிருந்து பராமரிக்க ஒரு பெண் உடனடியாகத் தேவை. அழைக்க விரும்புவோர், சுகதேகியாகவும் சுறுசுறுப்பாக வேலைகளைச் செய்யக் கூடியவராகவும் இருத்தல் அவசியம். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

Call: (647) 546-1646

## வேலைக்கு ஆட்கள் தேவை

Markham
Woodbine / Denison
Finch / Warden

Part-time kitchen helper, dishwasher, South Indian cooks, & wait staff wanted.

AMAR CHAUHAN:
(416) 988-9518

## வீடு வாடகைக்கு உண்டு

ஸ்காபுறோ நகரில் Conlins Road இல்
வீடு வாடகைக்கு உண்டு.
மேல் மாடியில் 4 அறைகளும், 2 முழு வசதிகளுமுள்ள குளியலறைகளும், சமையலறை வசதியும் உண்டு. கீழே (basement) 4 அறைகளும், 3 குளியலறைகளும், சமையல் அறை வசதியும் தனிப்பட்ட பாதை வசதியும் உண்டு. வாகன தரிப்பிடம் 6.
தனித்தினியாகவோ அல்லது முழுமையாகவோ வாடகைக்கு எடுக்கலாம்.
Close to Scarborough UofT & Centennial College.

Call: (437) 788-8416

உதயன் கதிரோட்டம்

# தமிழர்களின் இருப்பை அழிப்பதற்கு சிங்களவர்கள் மட்டுமல்ல தமிழர்களும் மறைமுகமாய் செயற்படுகின்றார்கள்

இலங்கைப் பாராளுமன்றம் மீண்டும் எம் மக்களின் நீதிக்காய் குரல் எழுப்பும் தமிழ் பேசும் அங்கத்தவர்கள் சிலரால் பரபரப்பை ஏற்படுத்துகின்றது. இவ்வளவு நாட்களும் சுமந்திரனின் பின்னால் நின்று மௌனத்தைக் கடைப்பிடித்த ஸ்ரீதரனும் 'உரத்துப்'' பேசத் தொடங்கியுள்ளார். இந்த 'சத்தம்' எத்தனை நாட்களுக்கு ஈடு கொடுக்கும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

முன்னாள் முதலமைச்சர் சி. வி. விக்கினேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்களின் உரைகள் தென்னிலங்கை இனவாத அரசியல்வாதிகளுக்கு 'தீனி' போட்டது போல அமைந்து விட்டது. முன்னைய இனவாத அரசியல்வாதிகளான சிறில் மெத்தியு போன்றவர்களை மிஞ்சும் வகையில் எதிர்ப்புக் குரல் எழுப்புகின்றார்கள். மேலும், நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய சார்ள்ஸ் நிர்மலநாதன் பல கேள்விகளை நேரடியாகவே எழுப்பியுள்ளார். தமிழர்களின் வரலாறு, கலாசார அடையாளங்களை அழித்து பௌத்த சிங்கள மயமாக்கலை ஏற்படுத்தவா தமிழர்கள் இல்லாத கிழக்கு மாகாண தொல்பொருள் செயலணி அமைக்கப்பட்டுள்ளது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்

அவர் எழுப்பியுள்ள கேள்விகள்,இனிவரும் நாட்களில் இடம்பெறவுள்ள பல விவாதங்களில் நிறையவே தர்க்கங்களைக் கொண்டுவரலாம். அப்போது, அனைத்து தமிழ்த் தரப்பினரும் ஒன்றுபட்டு எதிர்வாதங்களை முறியடிக்க வேண்டும் என்றே எமது மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

மேலும் இன்றை கதிரோட்டம் அமைந்துள்ள பக்கத்தில் அருகே காணப்படும் செய்தியை ஒரு படித்துப் பார்க்கத் தவறவேண்டாம்.

இம்மானுவேல் பாதிரி மற்றும் சுரேன் சுரேந்திரன் ஆகியோரின் பெயர்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஆதரவளித்தவர்கள் என கறுப்புப் பட்டியலில் பெயரிடப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் இந்த இரண்டு பேரும் ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் ஆதரவானவர்கள் போன்று இருந்து விட்டு பின்னர் சுமந்திரன் 'போன்றவர்களின் ஆலோசனைகளின் பேரில் ரணில் அரசோடு ஒத்துழைத்து பல சலுகைகளைப் பெற்றுக்கொண்டவர்கள் என கொழும்பில் உள்ள பத்திரிகையாளர்கள் தந்த தகவல்களின் அடிப்படையில் தெரிய வந்துள்ளது. இந்த இருவருக்கும் நெருக்கமானவர்கள் சிலர் கனடாவிலும் உள்ளார்கள் என்பதும், இவர்கள் அனைவரும் மைத்திரி- ரணில் ஆட்சியில் இருந்தபோது கொழும்புக்கு பயணம் செய்கின்றபோது அங்கு அரசாங்கத்தின் சார்பில் மறைமுகமான வரவேற்பைப் பெற்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்கள் இருவர் மட்டுமல்ல இந்தப் பாதிரியின் அணியில் பல புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் அடங்கியிருந்தார்கள். மைத்திரி- ரணில் ஆட்சியின் போது, அவர்கள் ராஜபக்சாக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிதர்சமாக்குவதற்கு இந்த தமிழர்களும் துணை நின்றார்கள்.

கனடா, அவுஸ்த்திரேலியா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் வாழும் பலர் இலங்கைக்கு அழைக்கப்பெற்று, நன்கு உபசரிக்கப்பெற்று பல திட்டங்களுக்கு துணைபோனார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையில், இலங்கை அரசுக்கு காலக்கெடு பெற்றுக்கொடுப்பது, சர்வதேச நீதி மன்றம் தேவையற்றது போன்ற விடயங்களுக்கு சாதகமாக தமிழர் தரப்பை நகர்த்திச் செல்வதற்கு திரை மறைவில் நடைபெற்ற பல கூட்டங்களில் இவர்கள் அனைவருமே திரைமறைவில் பங்காற்றினார்கள். இதன் விளைவுதான் தமிழர்களின் அனைத்துப் போராட்டங்களும் பின் தள்ளப்பட்டு தற்போது புலம் பெயர் தமிழர்கள் மத்தியில் ஒரு மந்த நிலை காணப்படுவதற்குரிய காரணம் என்று நாம் கருதுகின்றோம்.

எனவே எமது புலம் பெயர் தமிழ் மக்கள் ஒதுங்கிச் சென்றுவிடாது, தொடர்ந்து மக்கள் அமைப்புக்களோடு இணைந்து பணியாற்ற வேண்டும. ஊதாரணமாக, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கனடாவில் பிரம்ரன் மாநகரில் ஆரம்பமாகவுள்ள ஒட்டாவா மாநகர் நோக்கிய நீண்ட நடைப் பயணத்திற்கு தங்கள் ஆதரவை வழங்கவேண்டும். முன்னின்று செயற்படும் அனைத்துத் தரப்பினருக்கும் உற்சாகம் தரும் வகையில் கனடா வாழ் தமிழ் மக்கள் தொகையில் சிறு அளவினராவது அருகில் சென்று உற்சாகமளித்து ஆதரவு வழங்க வேண்டும். இதுவே எமது வேண்டுகோள்.

# இம்மானுவேல் பாதிரி சுரேன் சுரேந்திரன் ஆகியோரின் பெயர்களை, கறுப்புப் பட்டியலிலிருந்து நீக்கும்படி மங்கள சமரவீர தன்னிடம் கூறியதாக இராணுவ அதிகாரி தெரிவிப்பு





தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஆதரவளித்ததாக கறுப்புப் பட்டியலில் பெயரிடப்பட்டிருந்த இரண்டு பேரை, அதிலிருந்து நீக்குமாறு முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தனக்கு அழுத்தம் கொடுத்ததாக கிரித்தலே இராணுவ முகாமின் கட்டளை அதிகாரியாக செயற்பட்ட லெப்டிணன் கேர்ணல் 'ம்மி குமாரரத்ன தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு வெளிவிவகார அமைச்சராக மங்கள சமரவீர செயற்பட்டபோதே தனக்கு இவ்வாறு அழுத்தம் கொடுத்ததாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் பழிவாங்கல் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்தபோதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இம்மானுவேல் பாதிரி மற்றும் சுரேன் சுரேந்திரன் ஆகியோரின் பெயர்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஆதரவளித்தவர்கள் என கறுப்புப் பட்டியலில் பெயரிடப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் இந்த இரண்டு பேரும் ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் ஆதரவானவர்கள் போன்று இருந்து விட்டு பின்னர் சுமந்திரன் 'போன்றவர்களின் ஆலோசனைகளின் பேரில் ரணில் அரசோடு ஒத்துழைத்து பல சலுகைகளைப் பெற்றுக்கொண்டவர்கள் என கொழும்பில் உள்ள பத்திரிகையாளர்கள் தந்த தகவல்களின் அடிப்படையில் தெரிய வந்துள்ளது. இந்த இருவருக்கும் நெருக்கமானவர்கள் சிலர் கனடாவிலும் உள்ளார்கள் என்பதும், இவர்கள் அனைவரும் மைத்திரி- ரணில் ஆட்சியில் இருந்தபோது கொழும்புக்கு பயணம் செய்கின்றபோது அங்கு அரசாங்கத்தின் சார்பில் மறைமுகமான வரவேற்பைப் பெற்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, பாதியாரும் சுரேனும் தமது நண்பர்கள் எனவும் தாம் பிரித்தானியாவுக்கு விஜயம் மேற்கொண்ட காலப்பகுதியில் அவர்களுடன் நல்லுறவை பேணி இருந்ததாகவும் மங்கள சமரவீர தன்னிடம் கூறியதாக 'ம்மி குமாரரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், கறுப்புப் பட்டியலில் பெயரிடப்பட்டிருந்த குறித்த இரண்டு பேரை, அதிலிருந்து நீக்குமாறு முன்னாள் மங்கள சமரவீர தனக்கு அழுத்தம் கொடுத்ததாகவும் 'ம்மி குமாரரத்ன தெரிவித்துள்ளார்.


Amma Brand
இப்பொழுது கனடாவிலும் கிடைக்கின்றது!
Amma
Apple Cider
with Mother Vinegar
LOOSE WEIGHT
HELPS IN :
WEIGHT MANAGEMENT
GLOWING SKIN
GOOD FOR HEART
BLOOD PRESSURE
URIC ACID
100% Natural
NOW IN CANADA
Amma Apple Cider with Mother Vinegar
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471
Premium Quality
Amma
Gingelly Oil
(Contains Permitted Anti-Oxidants)
சுத்தமான நல்லெண்ணெய்
NOW IN CANADA
Import and Deliver
AMMA FOOD INC. 647-832-5471
நல்லெண்ணெய்
750ml
375ml
Amma Herbal
Juices
NOW IN CANADA
Jamun with Karela Juice
Aloe Vera Juice
Karela Juice
Amla Juice
Super Energizer
Neem Leaf with Aloe Vera Juice
Body Pain Relax Juice with Aloe Vera
Aloe Noni with Aloevera Juice
100% HERBAL
100% NATURAL
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471

இலங்கை செய்திகள்

# தமிழர்களின் அடையாளங்களை அழிக்கவா கிழக்கு செயலணி என சார்ள்ஸ் நிர்மலநாதன் கேள்வி

தமிழர்களின் வரலாறு, கலாசார அடையாளங்களை அழித்து பௌத்த சிங்கள மயமாக்கலை ஏற்படுத்தவா தமிழர்கள் இல்லாத கிழக்கு மாகாண தொல்பொருள் செயலணி அமைக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

புதிய அரசாங்கத்தின் இடைக்கால கணக்கறிக்கை நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதனையடுத்து, இடம்பெற்று வரும் விவாதத்தில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், “கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்பாக கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமையை பாதுகாப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் செயலணியொன்ற ஸ்தாபிக்கப்பட்டது.

12 பேர் அங்கம் வகிக்கும் அந்த செயலணியில் தமிழர் ஒருவர்கூட உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. அதனையடுத்து, அதற்கு தமிழர் தரப்பில் எதிர்ப்பு வெளியிடப்பட்டதுடன், குறித்த செயலணியில் தமிழர்களும் உள்வாங்கப்பட வேண்டும் என தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டது.

இந்த நிலையில், கடந்த பொதுத் தேர்தலின் பின்னர், அந்த செயலணியின் உறுப்பினர்களாக மேலும் நால்வர் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

எனினும் அவர்களிலும் தமிழர்கள் ஒருவர்கூட உள்வாங்கப் படவில்லை. கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமையை பாதுகாக்கும் செயலணியில் தமிழர் ஒருவர்கூட ஏன் நியமிக்கப்பவில்லை என நான் ஜனாதிபதியிடம் கேட்க விரும்புகிறேன்.



கிழக்கு மாகாணத்தின் மரபுரிமைகளை பாதுகாக்க பௌத்த மதகுருமார் அடங்கிய செயலணி உருவாக்கப்பட்டது, தமிழர்களுடைய வரலாறு, கலாசார அடையாளங்கள் என்பன அழிக்கப்பட்டு எதிர்காலத்தில் பௌத்த சிங்கள மயமாக்கலை ஏற்படுத்தவா என கேட்க விரும்புகிறேன்” என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக பேராசிரியர் சிறிசற்குணராஜா தெரிவு



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக கணிதப் புள்ளி விபரவியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்துக்கமைவாக, ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் படி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக‘வினால் சிரே‘ட பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் கடந்த வருடம் ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் துணைவேந்தர் பதவி வெற்றிடமாக இருந்து வந்தது. இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களுக்குத் துணைவேந்தர்களை நியமிப்பதற்கான புதிய நடைமுறைகள் அடங்கிய சுற்றுநிருபம் கடந்த மே மாத முற்பகுதியில் வெளியிடப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவிக்காக மே 15 ஆம் திகதி பதிவாளரினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களில் இருந்து - சுற்றுநிருபத்துக்கு அமைய இடம்பெற்ற மதிப்பீடுகளின் படி, கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற விசேட பேரவை அமர்வில் வைத்து திறமை அடிப்படையில் பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா, பேராசிரியர் கு. மிகுந்தன், பேராசிரியர் த. வேல்நம்பி ஆகியோர் பரிந்துரை செய்யப்பட்டு, அவர்களின் விபரங்கள் ஜனாதிபதியின் தெரிவுக்காக அனுப்பப்பட்டிருந்தன.

பல்கலைக் கழகப் பேரவையின் பரிந்துரையின் அடிப்படையில், மூவரினது பெயர்களையும் கடந்த 13 ஆம் திகதி பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைத்திருந்தது.

பல்கலைக்கழக கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றின் பரிந்துரைகளுடன் கிடைத்த மூன்று பெயர்களில் இருந்து, பல்கலைக் கழகப் பேரவை மதிப்பீட்டின் படி முதல் நிலையைப் பெற்றருந்த பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜாவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக நியமித்திருக்கிறார்.

# இசைத்துறை விரிவுரையாளர் கண்ணதாசன் தொடர்ந்தும் வெலிக்கடைச் சிறைச்சாலையில்


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இசைத்துறை விரிவுரையாளராக கடமையாற்றிய கண்ணதாசன் மீதான ஆயுள் தண்டனைத் தீர்ப்பு மேன்முறையீட்டு நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் அவர் மீதான பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டு வழக்கை மீள விளக்கத்துக்காக எடுப்பதற்காக வவுனியா மேல் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அந்த வழக்கு நேற்று முன்தினம் (புதன்கிழமை) விசாரணைக்கு வந்த போது, வரும் செப்பெரம்பர் 7ஆம் திகதி அழைக்குமாறு தவணையிட்ட வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன், அன்றைய தினம் எதிரியை மன்றில் முற்படுத்துமாறு வெலிக்கடைச் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற மிருதங்க கலைஞர்களில் ஒருவரான கண்ணதாசன் தமிழீழ இசைக் கல்லூரியின் பொறுப்பாளராக இருந்து, போரின் முடிவில் படையினரிடம் சரணடைந்து மறுவாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தார்.

அதன் பின்னர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இசைத்துறை விரிவுரையாளராக பணியாற்றி வந்தார். இந்நிலையில், கிளிநொச்சி மாவட்டம் உருத்திரபுரம் பகுதியில் 2007 ஜனவரி மாதமளவில், மஞ்சுளா விஜயபாலன் எனும் சிறுமியைக் கட்டாயமாக விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்த்ததாக அவருடைய தாயார், கண்ணதாசன் மீது 2014 மார்ச் மாதமளவில் வழக்கு தொடுத்தார்.

அடுத்த ஆண்டே பயங்கரவாத விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கண்ணதாசன், பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு, பல மாதங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.



அதனடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்காக, பலவந்தமாக ஆள்களைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விரிவுரையாளர் கண்ணதாசனுக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கில் அவர் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டு 2017ஆம் ஆண்டு அவருக்கு வவுனியா மேல் நீதிமன்றால் ஆயுட்தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

இந்தத் தண்டனையை எதிர்த்து க. கண்ணதாசன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனால் மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்பட்டது.

அந்த மேன்முறையீட்டு மனு மீது விசாரணை, இரண்டு ஆண்டுகளாக இடம்பெற்று வந்த நிலையில் கடந்த ஜூலை 22ஆம் திகதி அவரது ஆயுள் தண்டனையை இரத்துச் செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், குற்றப்பத்திரிகையை மீள விளக்கத்துக்கு எடுக்க அனுமதியளித்திருந்தது. இந்த நிலையில் அவருக்கு எதிராக குற்றப்பத்திரிகையை மீள விளக்கத்துக்கு எடுப்பதற்கு வவுனியா மேல் நீதிமன்றில் மீளவும் ஒப்படைக்கப்பட்டது.

இந்த வழக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் முன்னிலையில் அழைக்கப்பட்டது. வழக்குத் தொடுனரான சட்ட மா அதிபர் சார்பில் அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் முன்னிலையானார். கண்ணதாசன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையானார்.

எதிரி தொடர்ந்து வெலிக்கடைச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக மன்றுக்கு அறிவிக்கப்பட்டது. எதிரியை வரும் 7ஆம் திகதி முற்படுத்துமாறு வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு உத்தரவிட்ட வவுனியா மேல் நீதிமன்றம், அன்றைய தினம் வரை வழக்கை ஒத்திவைத்தது.

அதேவேளை இசைத்துறை விரிவுரையாளர் கண்ணதாசன், மேன்முறையீட்டு நீதிமன்றால் விடுவிக்கப்பட்டார் என்று கடந்த ஜூலை 22ஆம் திகதி ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. எனினும் அவர் விடுவிக்கப்படவில்லை.

இந்த வழக்கு மீள விளக்கத்துக்கு எடுக்கப்படவுள்ள நிலையில் கண்ணதாசன் சார்பில் வவுனியா மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டால் பரிசீலிக்கப்படும் என்று அரச தரப்புத் தெரிவித்துள்ளது.

ஆனால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அவரை குற்றப்பத்திரிகை மீள் விளக்கத்துக்கு வரவுள்ளதால் மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பை வைத்து விடுவிக்க முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# ஊரடங்கு தொடர்பாக விவாதிக்க அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுக : மார்க்சிஸ்ட் வலியுறுத்தல்



5 மாதத்துக்கும் மேலாக தமிழகத்தில் தொடரும் ஊரடங்கு முடிவுக்கு வர உள்ள நிலையில், அடுத்த மாதம் என்ன நிலை என்பது குறித்து விவாதிக்க அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழக அரசுக்குக் கோரிக்கை வைத்துள்ளது.

இதுகுறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் இன்று விடுத்துள்ள அறிக்கை:"தமிழகத்தில் 5 மாதத்திற்கு மேலாக பொதுமுடக்கம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இது தவிர, ஞாயிற்றுக்கிழமைகளில் முழு பொது முடக்கம் கடைப்பிடிக்கப்படுகிறது. பொது முடக்கம் மூலமாக மட்டுமே கரோனாவைக் கட்டுக்குள் கொண்டு வந்துவிடலாம் என்று மத்திய அரசும், அதை அப்படியே பின்பற்றிய மாநில அரசும் நோய்த்தொற்று அதிகமாகிக் கொண்டிருப்பதைக் கையறு நிலையில் வேடிக்கை பார்ப்பதாகவே தெரிகிறது.பரிசோதனை எண்ணிக்கை எதுவாக இருந்தாலும் கடந்த சில நாட்களாக தொற்றுக்குள்ளானவர்கள் எண்ணிக்கை 6000க்குள்ளாகவே இருப்பதும், மரணங்களின் எண்ணிக்கை 115 என்ற அளவில் இருப்பதும் பலவிதமான கேள்விகளை எழுப்புகிறது. மேலும், மரணமடைந்த மருத்துவர்கள் எண்ணிக்கையைக் கூட தமிழக அரசு குறைத்துக் காண்பிப்பது நேர்மையற்ற செயலாகும். அர்ப்பணிப்புடன் பணியாற்றிய மருத்துவர்களுக்கும் சம்பளம் வழங்குவதில் கூட இழுத்தடிப்பு செய்யப்படுவதாக வரும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

மறுபுறத்தில் பொதுமுடக்கத்தின் காரணமாக அன்றாடம் உழைத்துப் பிழைக்கும் மக்களும் அணிதிரட்டப்படாத தொழிலாளர்களும், சுய தொழில் செய்வோரும், போக்குவரத்து வாய்ப்பு இல்லாததால் வேலைக்குச் செல்ல முடியாமல், வாழ்வாதாரத்திற்கு வழியின்றியும் மிகவும் துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றனர். ஆரம்பத்தில் ஆயிரம் ரூபாயும், அதற்கடுத்து சில பகுதியினருக்கு 1000 ரூபாயும் அறிவித்த மாநில அரசு தன் முழு கடமையும் முடிந்துவிட்டதாக, அதன்பிறகு கண்டுகொள்ளவே இல்லை.துவரம் பருப்பு, சமையல் எண்ணெய், சர்க்கரை போன்ற ரேஷன் பொருட்களும் கூட இந்தக் காலத்தில் விலையில்லாமல் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, மாநில அரசு துன்பத்தில் உழலும் மக்களுக்கு நிவாரணங்களை அளிப்பதற்கும், ரேஷன் கடைகளில் வழங்கப்படும் அனைத்துப் பொருட்களையும் விலையின்றி வழங்குவதற்கும் முன்வர வேண்டும். அனைத்துக் குடும்பத்தினருக்கும் (வருமான வரி செலுத்தாத) அடுத்த ஆறு மாத காலத்திற்கு மத்திய, மாநில அரசுகள் ரூபாய் 7,500/ வழங்கிட வேண்டும்.

பொதுமுடக்கம் 5 மாத காலத்திற்கு மேலான நிலையில் வீட்டு வாடகை, மருத்துவச் செலவுகள், உணவுப் பொருட்கள் உள்ளிட்ட ஒவ்வொரு தேவைக்கும் மக்கள் திண்டாடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பொதுப் போக்குவரத்து முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டுள்ள நிலையில், தினசரி வேலைக்குச் செல்வோர் அதற்கான வாய்ப்பின்றி சொல்லொணா துயரத்திற்கு ஆளாகி வருகின்றனர்.எனவே, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடனும், கட்டுப்பாடுகளுடனும் பொதுப் போக்குவரத்து தொடங்குவது குறித்து மாநில அரசு உரிய முடிவுகளை மேற்கொள்ள வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு வலியுறுத்துகிறது.

ஏற்கெனவே அனுசரிக்கப்பட்ட ஊரடங்கு ஆகஸ்ட் 31ம் தேதியில் நிறைவடைய உள்ளது. தொடர்ச்சியான ஊரடங்கு, பொதுமுடக்கத்தை நீட்டிப்பது மக்களுக்குக் கடும் சிரமத்தை அளித்துள்ளது. அதேசமயம் அனைத்துத் தளர்வுகளும் ரத்து செய்யப்படுமானால் நோய்ப்பரவல் ஆபத்து ஏற்படுமோ என்ற அச்சமும் பொதுமக்களிடம் உள்ளது.மேலும், கரோனா தொற்று ஆரம்பித்த காலம் முதல் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி விவாதிப்பதற்கு மாநில அரசு மறுத்து வருகிறது. இந்தத் தோல்விகளுக்கு முழுமையாக மாநில அரசே பொறுப்பேற்க வேண்டும். எனவே, நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்தவும், பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சைகளை மேம்படுத்தவும், மருத்துவப் பரிசோதனைகளை அதிகப்படுத்திட வேண்டும். தொற்றுள்ளவர்களைத் தொடக்கத்திலேயே அடையாளம் கண்டு உரிய சிகிச்சை அளித்து இறப்புகளை குறைத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும்.மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட, வேலை வருமானத்தைப் பெற்றிட, ஊரடங்கைத் தளர்த்துவது, உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து தமிழக அரசு தெளிவான முடிவுகளை மேற்கொள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களது கூட்டத்தினைக் கூட்டி விவாதித்து, முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்". இவ்வாறு கே.பாலகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

## தந்தை இறந்தது தெரிந்தும் சுதந்திர தினவிழா அணிவகுப்பை வழிநடத்திய பெண் ஆய்வாளருக்கு ஆட்சியர் நற்சான்றிதழ்



தனது தந்தை இறந்தது தெரிந்தும் திருநெல்வேலி மாவட்ட நிர்வாகம் சார்பில் பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானத்தில் நடைபெற்ற சுதந்திர தினவிழாவில் காவல்துறையினரின் அணிவகுப்பை வழிநடத்திய காவல் ஆய்வாளர் மகேஸ்வரிக்கு மாவட்ட ஆட்சியர் ஷில்பா பிரபாகர் சதீஷ் நற்சான்றிதழ் வழங்க பாராட்டினார். பாளையங்கோட்டை வ.உ.சி மைதானத்தில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் தேசிய கொடியை ஏற்றி வைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

இந்த அணிவகுப்பை பாளையங்கோட்டை ஆயுதப்படை ஆய்வாளர் மகேஸ்வரி தலைமையேற்று வழிநடத்தினார். அதற்கு முந்தைய நாள் தனது தந்தை நாராயணசுவாமி மரணமடைந்தது குறித்து தெரியவந்திருந்தாலும், கடைமை உணர்வுடன் சுதந்திரன அணிவகுப்பை தலைமையேற்று நடத்திய மகேஸ்வரிக்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது.

துணைமுதல்வர் ஓ. பன்னீர்செல்வம், திமுக தலைவர் மு.க. ஸ்டாலின், மதிமுக பொதுசெயலாளர் வைகோ உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும், காவல்துறை உயர் அதிகாரிகளும் அவரது மனஉறுதிக்கு பாராட்டுகளை தெரிவித்துள்ளனர்.இந்நிலையில் மகேஸ்வரிக்கு மாவட்ட ஆட்சியர் ஷில்பா பிரபாகர் சதீஷ் நற்சான்றிதழை வழங்கி பாராட்டு தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் கரோனா 4 லட்சத்தைக் கடந்தது; இன்று 5,958 பேருக்குத் தொற்று; சென்னையில் 1,287 பேர் பாதிப்பு

தமிழகத்தில் இன்று 5,981 பேருக்குக் கரோனா தொற்று உறுதியாகியுள்ளது. மொத்த எண்ணிக்கை 4,03,242ல் சென்னையில் மட்டும் 1,30,564 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மொத்த பாதிப்பு 4 லட்சத்தைக் கடந்துள்ளது. இன்று மட்டும் வெளி மாநிலத்திலிருந்து தமிழகத்துக்கு வந்தவர்களில் 30 பேருக்குத் தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அரசு அனுமதி அளித்தபின் அண்டை மாநிலம் மற்றும் வெளிநாடுகளிலிருந்து விமானம், ரயில், சாலை மார்க்கமாக வந்தவர்கள் இன்றைய தேதி வரை மொத்த எண்ணிக்கை 7,09,455.சென்னையில் 1,281 பேர் கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்று சென்னை உள்ளிட்ட 37 மாவட்டங்களில் தொற்று எண்ணிக்கை வந்துள்ளது. சென்னையைத் தவிர 36 மாவட்டங்களில் 4,700 பேருக்குத் தொற்று உள்ளது. இதில் சென்னையைத் தவிர வேறு சில மாவட்டங்களிலும் நான்கு இலக்கத்தில் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

* தற்போது 63 அரசு ஆய்வகங்கள், 83 தனியார் ஆய்வகங்கள் என 146 ஆய்வகங்கள் உள்ளன.இந்த நிலையில் பொது சுகாதாரத் துறை தமிழகத்தில் கரோனா நோயாளிகள் எண்ணிக்கை, நிலை குறித்து இன்று வெளியிட்ட அறிவிப்பு:

* தனிமைப்படுத்துதலில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 52,364.

* மொத்தம் எடுக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை 44,98,706.* இன்று ஒரு நாளில் எடுக்கப்பட்ட சோதனை மாதிரி எண்ணிக்கை 76,345.

* மொத்தம் தொற்று உள்ளவர்கள் எண்ணிக்கை 4,03,242.

* சென்னையில் தொற்று உறுதியானவர்கள் எண்ணிக்கை 1,281.

* மொத்தம் தொற்று உள்ளவர்கள் எண்ணிக்கையில் ஆண்கள் 2,43,589 பேர். பெண்கள் 1,59,624 பேர். மூன்றாம் பாலினத்தவர் 29 பேர்.

* தொற்று உறுதியானவர்களில் ஆண்கள் 3,643 பேர். பெண்கள் 2,338 பேர்.

* இன்று டிஸ்சார்ஜ் ஆனவர்கள் 5,870 பேர். மொத்தம் டிஸ்சார்ஜ் ஆனவர்கள் 3,43,930 பேர் .

* இன்று கரோனா வைரஸ் நோய்த் தொற்றினால் 109 பேர் உயிரிழந்தனர். இதில் 30 பேர் தனியார் மருத்துவமனையிலும், 79 பேர் அரசு மருத்துவமனையிலும் உயிரிழந்தனர். இதில் சென்னையில் 32 பேர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை 6,948 ஆக உள்ளது. இதில் சென்னையில் மொத்தம் 2,666 பேர் உயிரிழந்துள்ளனர். முக்கியப் பிரச்சினையாக சுவாசப் பிரச்சினை, மாரடைப்பு, கோவிட் நிமோனியா ஆகியவை அதிக அளவு மரணத்துக்குக் காரணமாக உள்ளன. நீண்டகால நோயால் பாதிக்கப்பட்டிருந்தவர்கள் 101 பேர். எவ்விதப் பாதிப்பும் இல்லாதவர்கள் 8 பேர். இவ்வாறு பொது சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

# தமிழகத்தில் 'இபாஸ்' கட்டாயம் : மீண்டும் வலியுறுத்தி பேசிய முதலமைச்சர்

எடப்பாடி பழனிசாமி யார் யார் எங்கு செல்கிறார்கள் என்பதை இபாஸ் முறை இருந்தால்தான் கண்டறிய முடியும் என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.கடலூரில் கொரோனா தடுப்பு, வளர்ச்சி பணிகள் பற்றி ஆலோசித்த பின்னர் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறியதாவது:

* தமிழகத்தில் கொரோனாவை தடுக்க கடுமையான நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது.

* தமிழகத்தில் அதிகளவு கொரோனா பரிசோதனைகள் செய்வதன் காரணமாக தொற்று கட்டுக்குள் உள்ளது.

*உரிய சிகிச்சைகள் அளிக்கப்படுவதால் கொரோனாவுக்கு ஆளாகும் நபர்கள் அச்சப்பட வேண்டாம்.

* கடலூர் மாவட்டத்தில் இதுவரை 8 ஆயிரத்திற்கும் அதிகமான காய்ச்சல் முகாம்கள் நடைபெற்றுள்ளன.

* கடலூரில் கொரோனா தடுப்புக்காக 39 நடமாடும் மருத்துவக்குழுக்கள் செயல்படுகின்றன.

* கடலூர் மாவட்டத்தில் முதலமைச்சரின் சிறப்பு குறைதீர் திட்டம் மூலம் 9,965 பேருக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

* கடலூரில் மட்டும் 3 ஆண்டுகளில் சுய உதவி குழுக்களுக்கு ரூ.1,114 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது

* கடலூர் மாவட்டத்தில்தான் அதிகளவு தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் கூறினார். பின்னர் நீட் தேர்வு, இபாஸ் தொடர்பான செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த முதலமைச்சர் கூறியதாவது:

* கொரோனா தாக்கம் குறைந்த பின் நீட் தேர்வு நடத்துமாறு பிரதமருக்கு நான் ஏற்கனவே கடிதம் எழுதி உள்ளேன்.

* யார் யார் எங்கு செல்கிறார்கள் என்பதை இபாஸ் முறை இருந்தால்தானே கண்டறிய முடியும் என்று அவர் கூறினார்.

# உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்காக ‘புலிகளின்குரல்’ வானொலி விடுக்கும் அறிவித்தல்



தேசத்தின் வாசத்தை சுவாசித்து வாழும் உங்களுக்கு, புலிகளின்குரல் நிறுவனத்தின் புரட்சிகர வணக்கங்கள்.

தாயகத்தில் 2009ம் ஆண்டுவரை பண்பலையில் ஒலித்து வந்த புலிகளின்குரல் வானொலி, எமது ஆயுத மௌனிப்புக்கு பின்னர், 2009ம் ஆண்டு யூலை 05, கரும்புலிகள் நாள் முதல் இணையத்தில் மீண்டும் ஒலிக்கத்தொடங்கியதை நீங்கள் யாவரும் அறிவீர்கள்.

இந்த 11 ஆண்டுகளாக எமது இணையத்தளத்தில் ஒலித்து வந்த புலிகளின்குரல் வானொலியை, தற்போது ஆட்சியில் உள்ள சிறிலங்கா அரசானது தனது சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி, நிறுத்துவதற்கான முயற்சியினை மேற்கொண்டுள்ளது.

சிறிலங்கா அரசின் இச் செயற்பாட்டிற்கு இந்த உலகமும் ஒத்துழைக்கின்றது. எமது இணையத்தளத்திற்கு சேர்வர் வழங்கும் நிறுவனம், மற்றும் Google Play Store, Apple Store நிறுவனங்களுக்கு சிறிலங்கா அரசானது ஒரு உத்தியோகபூர்வ கடிதத்தினை அனுப்பி வைத்துள்ளது.

அதில் எமது வானொலிக்கான சேவையை நிறுத்துமாறும், இது விடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வ வானொலியெனவும்,இவர்கள் வன்முறையை தூண்டுகிறார்கள் எனவும் குறிப்பிட்டு, அக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்கள்.

எமது வானொலிக்கு இணையத்தள சேர்வரினை வழங்கிய நிறுவனத்தினர், தங்களோடு இணைந்து எமது வானொலியை தொடர்ந்தும் செயற்படுத்த முடியாது என கூறியதற்கு அமைய, எமது இணையத்தளம் வேறு சேர்வர் நிறுவனத்தோடு இணைந்து தற்போது மீண்டும் இயங்குகின்றது என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

ஆனால் Google Play Store மற்றும் Apple Store நிறுவனங்கள் சிறிலங்கா அரசின் வேண்டுகோளுக்கு இணங்க, எமது வானொலிக்கு என பிரத்தியேகமாக அமைக்கப்பட்டு, சேவையில் இருந்த செல்லிடப்பேசிகளின் மென் பொருட்கள் (Apps) மற்றும் முகப்புத்தகம் போன்றவற்றை, பாவனையில் இருந்து நிறுத்தியுள்ளது என்பதனை உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

எனவே, வெகு விரைவில் எதோ ஒரு வழியில், எமது வானொலிக்குரிய மென்பொருட்கள் இணைக்கப்படும் என்பதனை எமது மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

எத்தனையோ தடைகளை சந்தித்த எமது வானொலி, இத் தடையையும் கடந்து, தொடர்ந்து தேசத்தின் வாசம் சுமந்து தேசியத்தலைவரின் எண்ணக்குரலாக ஒலித்துக் கொண்டே இருக்கும் என்பதனை உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

புலிகளின்குரல் நிறுவனம்
26.08.2020
www.pulikalinkural.com

# முள்ளிவாய்க்காலில் சத்தியப்பிரமாணம் செய்த விக்கி; கஜன் மீது விசாரணை நடத்த வேண்டுமாம்

## “சத்தமிடும்” சரத் வீரசேகர







நாடாளுமன்ற அமர்வுக்கு முன்னதாக முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்கு சென்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் மீது விசாரணை நடத்த வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் இன்று உரையாற்றிய அட்மிரல் சரத் வீரசேகர, நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் கடந்த நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை குறித்து கடும் விமர்சனங்களை முன்வைத்தார்.

குறிப்பாக கடந்த வாரம் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபிக்கு முன்பாக சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அங்கு உத்தியோகபூர்வமற்ற பதவிப்பிரமாணத்தை செய்துகொண்டதாகவும், அதுகுறித்து அவர்களிடம் விசாரணை செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

“மீண்டும் இந்த நாட்டில் சமாதானத்தை சீர்குலைக்கும் வகையில் நாடாளுமன்றில் கருத்துக்கள் வெளியிட்டால் அல்லது தமிழ் மக்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தும் வகையில் பேசினால் சுயநிர்ணயத்திற்காக தமிழ் இளைஞர்களை மீண்டும் தூண்டும் வகையில் பேசினால் உண்மையிலேயே அதனை நிராகரிக்க வேண்டும். நாடாளுமன்றத்தின் முதல் அமர்விலேயே தமிழ்ப் பிரதிநிதி ஒருவர், தமிழ் மொழிதான் சுதேசவாசிகளின் மொழி என்று கூறியிருந்தார்.

அதனை நிர்ணயிப்பது இதுபோன்ற சபையல்ல. எனினும் எமது நாட்டைப் பற்றிய 2500 ஆண்டுகள் ஆவண வரலாற்றைக் கொண்டுள்ளதுடன், இங்குள்ள அனைத்து சம்பிரதாயங்களையும் சிங்களவர்களே இயற்றி வைத்தார்கள். இது நாடு முழுவதிலும் உள்ள தொல்பொருள் அடையாளங்களினால் உறுதிபடுகிறது. இந்த வரலாற்றை தெரிந்து கொண்டே வல்லிபுரம் சிதைவுகளைத் தெரிந்துகொண்டே பிழையானவற்றைக் கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாது.

சுயநிர்ணயத்தைக் கோரி அவர் கருத்து முன்வைத்திருப்பதானது தாயுடன் சிறிய குழந்தை சந்தைக்குச் சென்று இனிப்பைக் கோருவதற்கு சமமாகும். 50 சதவீதத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் தென்னிலங்கையில் ஏனைய இனத்தவர்களுடன் வாழ்கின்றனர். ஆனால் மிகவும் பொறுப்புவாய்ந்த மதிப்பிற்குரிய அந்த உறுப்பினர், சிங்களவர்கள் வடக்கில் வாழமுடியாது என்று கூறியிருக்கின்றார்.

அவர் ரோயல் கல்லூரியில் பயின்றவர். சிங்களவர்களுடன் சட்டக்கல்லூரியில் பயின்றவர். 65 வருடகாலமாக சிங்கள சமூகத்துடன் வாழ்ந்தவர். இவர் தொடர்ச்சியாக சிங்கள மொழி, சிங்கள மக்கள் மீது அவதூறு செய்து வருகின்றார். பௌத்த மதத்திற்கு எதிராகவும், வடக்கில் புத்தர் சிலைகளை அகற்றும்படியும் கிளிநொச்சியில் போராட்டம் நடத்தியுள்ளார்.

அவர் வேறுயாருமல்ல, விக்னேஸ்வரன் தான். அவர் முள்ளிவாய்க்காலில் பதவிப்பிரமாணம் செய்கின்றார். முள்ளிவாய்க்கால் என்பது ஈழத்திற்கான போர் நிறைவுற்ற இடம். அங்கு பல ஆயுதமேந்தியவர்கள் கொல்லப்பட்டனர். அங்கு சென்று உத்தியோகபூர்வமற்ற பதவிப்பிரமாணம் செய்பவராயின் பிரிவினைவாத சக்திகளின் தூண்டுதல்கள் ஏற்பட்டுள்ளன.

ஆகவே இதுகுறித்து அவரிடம் விசாரணை செய்ய வேண்டும். அவர் பேசிய கருத்துக்களும் ஹான்சாட்டிலிருந்து நீக்கப்படல் வேண்டும்.

இலங்கைப் படையினர் இனப்படுகொலை செய்தார்கள் என்றும், போர்குற்றம் செய்தார்கள் எனவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியுள்ளார். கோட்டாபய ராஜபக்சவுக்கு யாழ்ப்பாணத்தில் வாக்குகள் கிடைக்காமைக்கான காரணமும் இனப்படுகொலை செய்தமையே என்றும் கூறியுள்ளார்.

கடந்த கால ஜனாதிபதி தேர்தலில், இனப்படுகொலை செய்தார்கள் எனக்கூறும் படைக்குத் தலைமைதாங்கிய பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு அதிக மக்கள் வடக்கில் வாக்களித்தார்கள். ஆகவே கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தர்க்கத்தை நிராகரிக்கிறோம். போர்க்குற்றம் பற்றிய விசேட நிபுணர்களாகிய சேர். டெஸ்மன் டி சில்வா, ஜெப்ரி நைஸ், பேராசிரியர் மைக்கல் கிரேன், பேராசிரியர் மைக்கல் நியூட்டன், ரொட்னி டிக்ஸன், கியூஸி, மேஜர் ஜெனரல்.ஜோன் ஹோம்ஸ் உள்ளிட்டவர்களும் போர்க்குற்றம் இடம்பெறவில்லை என்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உயர்குலத்தினர் தாழ் குலத்தினருக்கு இரத்ததானம்கூட செய்யமாட்டார்கள். இப்படியிருக்க, சிங்களப் படையினர் அங்கு பலருக்கும் இரத்ததானம் செய்திருக்கின்றனர். ஆகவே இவர்களுக்கு தமிழ் மக்கள் பற்றி கருத்து கூற உரிமை கிடையாது. சிங்களப் படையினருக்கும் எமக்குமே அதற்கான உரிமை இருக்கிறது. காணாமல்போனோர் அலுவலகத்திற்கும் இம்முறை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளேயை தற்கொலைதாரி ஒருவரே கொலை செய்தார். அவரது ஆள் அடையாளம் இதுவரை உறுதியாகவில்லை. இந்நிலையில் அவருக்கான நட்டஈட்டைக் கோரினால் எப்படி வழங்குவது? சாலிய பீரிஸ் என்பவர் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர போர்க் குற்றம் பற்றி கூறிய போது அதனை வரவேற்றவர்.

நிமல்கா பெர்ணான்டோவும் அதற்கு சாதகமாக ஜெனீவாவில் கருத்துரைத்தவர். இப்படிப்பட்டவர்கள் அங்கம் வகிக்கின்ற காணாமல் போனார் அலுவலகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்வது குறித்தும் நாங்கள் ஆராய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அருள் மிகு ஸ்ரீ நல்லூர் கந்தசுவாமி கோவில்

ஸ்ரீ நல்லூர் சிவன் கோவில் 20 Nugget Ave # 01

ராகு கேது பெயர்ச்சி மகாஹோமம்



01.09.2020அன்று ராகுபகவான் கேதுபகவான் பெயர்ச்சி முன்னிட்டு விசேட ஹோமம்

நிகழும் சார்வாரி வருடம் ஆவணி 17 நாள் (01.09.20) செவ்வாய்க்கிழமை இத்திருநாளில் இடபம், மிதுனம், சிங்கம்,கன்னி,துலாம்,தனுசு,மகரம்,கும்பம்,மீனம் ஆகிய ராசிக்காரர்கள் தங்களுக்கு எற்படஇருக்கும் பலன்களின் தொழில் இழப்பு,இடமாற்றம், கலகம்,, விரோதம், பொருளழிவு, காரியநஷ்டம். அபகீர்த்தி,மரணபயம்,பிணிதுயரம்,செலவு, வியாதி, ரோகம், கஷ்டம், துக்கம் என்பன எற்படவாய்ப்புண்டு. ஆகவே இவ்வாறான ராகு,கேது பலம் குறைந்த நட்சத்திரக்காரர்களும் ராசிகாரர்களும் இந்த முக்கிய ஹோமத்திலே பங்கு கொண்டு ராகுகேது பாகவானுக்கும் நடைபெறுகின்ற விசேடஹோமம், அபிசேகத்திலும் விசேடபூசையிலும்கலந்துகொண்டு ராகுகேதுபகவானின் அனுக்கிரகத்தி னைப்பெற்று ஓரளவு தீயபலனை தவிர்த்துக் கொள்ளுவதுடன் சிறப்பான நல்ல பலனைப் பெற்று பெருவாழ்வு வாழ்வீர் என அன்புடன் அழைக்கின்றோம்

.பரிகாரம்:– விநாயகர்,துர்க்கை,ஆஞ்சனேயர் வழிபாடு செய்துவரவும்சகல விடயங்களும் நிவிர்த்தியாகும்.

ஹோமமுடிவில் தோஷநிவிர்த்தி நூல், காரிய சித்திபொட்டு என்பன வழங்கப்படும்

தொலைபேசி இல –416-293-9004

# ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக கொரோனா தடுப்பூசியை சென்னையில் பரிசோதிக்க தமிழக அரசு திட்டம்




ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் கண்டுபிடித்த கோவிஷீல்டு தடுப்பூசியை சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் போரூர் ராமச்சந்திரா மருத்துவமனை ஆகிய இரண்டு இடங்களிலும் சுமார் 300 நபர்களிடம் செலுத்தி சோதனை நடத்தப்பட உள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. இதுகுறித்து தமி-ழக அரசு இன்று வெளியிட்ட செய்திக்குறிப்பில், "தமிழக அரசு, வைரஸ் தொற்று சிகிச்சைகளைத் தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது. தமிழகம் முழுவதும் அரசு மருத்துவமனைகளில் உள்கட்டமைப்பு வசதிகளும் தொடர்ந்து உயர்த்தப்பட்டு மருத்துவப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். Remdesivir - Tocilizumab - Enoxaparin போன்ற உயிர் காக்கும் வீரியம் மிக்க மருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. மனித குலத்தை நோய்த்தொற்று தாக்குதலிலிருந்து பாதுகாக்க தடுப்பூசிகள் மட்டுமே பேருதவியாக இருக்கும் என்பது மருத்துவ நிபுணர்களின் கருத்து. பல்வேறு நாடுகள் விற்கு தடுப்பூசி கண்டுபிடிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. இங்கிலாந்தைச் சார்ந்த ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகமும் ஒரு தடுப்பூசியைக் கண்டுபிடித்து இந்தத் தடுப்பூசியை ஆரோக்கியமான நபர்களுக்குச் செலுத்தி நோய் எதிர்ப்புத் திறனைக் கண்டறியும் ஆராய்ச்சிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இந்தத் தடுப்பூசி வைரஸ் தொற்றைத் தடுக்கும் வல்லமை வாய்ந்ததாக அமையும் என்பது உலக அளவில் மருத்துவ நிபுணர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. இதன் ஒரு பகுதியாக, இந்திய அளவில், தடுப்பூசியைச் சோதனை செய்ய இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ICMR) மற்றும் இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு வாரியம் (DCGI) சென்னையைத் தெரிவு செய்துள்ளது.



தமிழ்நாடு அரசின் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் முதன்மை ஆய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த ஆய்வு 18 வயதிற்கு மேற்பட்ட ஆரோக்கியமான நபர்களிடம் மேற்கொள்ளப்படும். இந்த ஆராய்ச்சியை சென்னை சேத்துப்பட்டில் அமைந்துள்ள தேசிய காசநோய் ஆராய்ச்சிக் கழகமும், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமும் இணைந்து மேற்கொள்ளும். சென்னையைப் பொறுத்தவரையில் இந்த கோவீ'ல்டு தடுப்பூசி ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் போரூர் ராமச்சந்திரா மருத்துவமனை ஆகிய இரண்டு இடங்களிலும் சுமார் 300 நபர்களிடம் செலுத்தி சோதனை நடத்தப்பட உள்ளது. இந்தத் தடுப்பூசி டி-செல்கள் என்று அழைக்கப்படும் வெள்ளை அணுக்களை 14 நாட்களில் மனித உடலில் உருவாக்கும். இந்த வெள்ளை அணுக்கள் மனிதர்களின் உடலில் வைரஸால் பாதிக்கப்பட்ட செல்கள் மீது தாக்குதல் தொடுத்து உடனடியாக அதனை அழித்துவிடும். மேலும், 28 நாட்களுக்குள் நோய் எதிர்ப்புச் சக்தியையும் உடலில் உருவாக்கிவிடும். இரண்டாம் கட்ட ஆராய்ச்சியைத் தொடர்ந்து மூன்றாம் கட்ட ஆராய்ச்சி நடத்தப்பட்டு தடுப்பு மருந்து பயன்பாட்டிற்கு வெகு விரைவில் கொண்டு வரப்படும். முதல்வரின் மக்கள் நலன் காக்கும் பணிகள் தடுப்பை மேலும் வலுப்படுத்துவதாக அமையும்". இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.



# விராட் கோலி - நடிகை தமன்னா ஆகியோரைக் கைது செய்ய வழக்குப் பதிவாகியது

கொரோனா ஊரடங்கு காலத்தில் ஆன்லைன் விளையாட்டுக்களுக்கு மவுசு அதிகரித்துள்ளது. இந்த நிலை-யில் ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்யக் கோரியும், அதை ஊக்குவிக்கும் விளம்பரங்களில் நடித்த கிரிக்கெட் வீரர் விராட் கோலி, நடிகை தமன்னா உள்ளிட்டோரை கைது செய்யக் கோரி-யும் வழக்கு தொடரப்பட்டுள்ளது. ஆன்லைன் சூதாட்டதிற்கு அடிமையானதால் சென்னையை சேர்ந்த கல்லூரி மாணவர் ஒருவர் சமீபத்தில் தற்கொலை செய்து கொண்டார்.

இதனையடுத்து ஆன் லைன் சூதாட்டத்திற்கு தடை விதிக்கக்கோரி சென்னையை சேர்ந்த வழக்கறிஞர் சூரியபிரகாசம் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். கிரிக்கெட் வீரர் விராட் கோலி நடிகை தமன்னா போன்ற பிரபலங்களை வைத்து விளம்பரங்கள் வெளியிட்டு இளைஞர்கள் மூளைச்சலவை செய்யப்படுவதாக அந்த மனுவில் கூறியிருந்தார்.

சூதாட்டத்திற்காக, வட்டிக்கு பணம் வாங்கி பின்னர் அதை கட்ட முடியாத சூழல் ஏற்படும்போது, இளைஞர்கள் தற்கொலை செய்து கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். ப்ளூாவேல் விளையாட்டால் பல இளைஞர்கள் தற்கொலை செய்தனர் என்றும் அதற்கு உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளதை சுட்டிக்காட்டினார். அத்தகைய ஆன்லைன் சூதாட்ட நிறுவன விளம்பரத்தில் நடித்த விராட் கோலி, தமன்னா உள்ளிட்டோரையும் கைது செய்ய வேண்டும் என கோரியுள்ளார். இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் எம்.எம். சுந்தரே', ஹேமலதா அடங்கிய அமர்வு, மனு தொடர்பாக மூன்று வாரங்களில் பதிலளிக்க மத்திய மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டனர்.

# கட்டுப்பாடுகளுடன் திரைப்படப் படபிடிப்பு நடத்த இந்திய அரசு அனுமதியளித்துள்ளது



திரைப்படத் தயாரிப்புகள் நமது நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது. இப்போது கோவி-ட்-19 நோய்த் தொற்றுப் பரவல் உள்ள சூழ்நிலையில், தங்கள் பணிகளை மீண்டும் தொடங்கி, தொடரும் போது, திரைப்படத் தயாரிப்பில் தொடர்புடைய பல்வேறு துறையினரும், நோய்த் தொற்று பரவாமல் இருப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். திரைப்படத் தயாரிப்புப் பணிக-ளில் மேற்கொள்ள வேண்டிய, தரநிலைப்படுத்திய செயல்பாட்டு நடைமுறைகள் (எஸ்.ஓ.பி.) மற்றும் வழிகாட்டி கோட்பாடுகளை, மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் ஆலோசனையுடன், மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சகம் உருவாக்கியுள்ளது. இவற்றை தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. பிரகா' ஜவடேகர் இன்று புதுடெல்லியில் வெளியிட்டார். கட்டுப்பாட்டுப் பகுதியில் அனுமதிக்கப்படாத, அத்தியாவசியம் அல்லாத செயல்பாடுகளின் போது பின்பற்றும் வழிமுறைகள், நோய் தொற்றுவதற்கு அதிக ஆபத்து உள்ள அலுவலர்கள் கூடுதல் முன்னெச்சரிக்கை அம்சங்களைப் பின்பற்றுதல், முகக் கவச உறைகள் பயன்படுத்துதல், அடிக்கடி கைகளைக் கழுவுதல், கைகளில் கிருமிநாசினிகள் பயன்படுத்துதல் உள்ளிட்ட சுகாதாரம் மற்றும் குடும்ப அமைச்சகம் அளித்துள்ள பொதுவான கோட்பாடுகளும் இதில் அடங்கியுள்ளன. திரைப்படத் தயாரிப்பின் போது பயன்படுத்தும் சுவாச இடைவெளி வசதிகள் பற்றியும் இதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

சர்வதேச நடைமுறைகளைக் கருத்தில் கொண்டு பொதுவான எஸ்.ஓ.பி. களை இந்த அமைச்சகம் உருவாக்கியுள்ளது. உடல் அளவில் இடைவெளியைப் பராமரித்தல், படப்பிடிப்புத் தளங்கள் மற்றும் இடங்களுக்குள் வருதல் மற்றும் வெளியேறுதலுக்கு குறிப்பிட்ட நுழைவாயிலைப் பயன்படுத்துதல், கிருமிநீக்கம் செய்தல், அலுவலர்கள் பாதுகாப்பு, நேரடித் தொடர்புகளைக் குறைந்தபட்ச அளவுக்குள் வைத்துக் கொள்வது, மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட தனிமைப்படுத்தல் உள்ளிட்ட பயணத்துக்கான வழிகாட்டுதல்களைப் பின்பற்றுதல் உள்ளிட்ட அம்சங்கள் இதில் அடங்கியுள்ளன. குறிப்பாக, முகக் கவச உறை அணிவதைப் பொருத்த வரை-யில், சர்வதேச நடைமுறைகளைப் போல, கேமராவுக்கு எதிரே நடிப்பவர்களைத் தவிர மற்ற அனைவரும் அதை அணிந்திருக்க வேண்டும் என்று இதில் குறிப்பிடப் பட்டுள்ளது.



வழிகாட்டும் கோட்பாடு மற்றும் எஸ்.ஓ.பி. ஆகியவற்றை அனைத்து மாநிலங்களிலும் படப்பிடிப்புகள் தொடங்கும் போது, அந்த மாநிலங்களும், இதில் தொடர்புடையவர்களும் பின்பற்ற வேண்டும். வழிகாட்டு நெறிகளை வெளியிட்ட மத்திய அமைச்சர் திரு. பிரகா' ஜவடேகர், சர்வதேச நியதிகளைப் பின்பற்றி இந்த எஸ்.ஓ.பி.கள் உருவாக்கப்பட்டுள்ளன. கொரோனா பரவல் காரணமாக சுமார் 6 மாதங்களாக முடங்கி இருக்கும் திரைத் துறையின ருக்கு இது புதிய ஊக்கம் தருவதற்கு உதவிகரமாக இருக்கும். அமைச்சகத்தின் இந்த நடவடிக்கையை அனைவரும் வரவேற்பார்கள்"" என்று கூறினார். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் துறைகள் மூலம் பெருமளவிலான மக்கள் வேலைவாய்ப்பு பெறுவதால், இந்த நடவடிக்கை நாட்டின் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு உந்துதலாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். அனைத்து மாநிலங்களும் இந்த எஸ்.ஓ.பி.களை ஏற்றுக் கொண்டு அமல் செய்யும் என்று அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார். தேவை இருந்தால் மாநிலங்களும் கூடுதல் அம்சங்களை இதில் சேர்த்துக் கொள்ளலாம் என்று அவர் குறிப்பிட்டார். மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம், உள்துறை அமைச்சகங்களின் ஆலோசனைகளைப் பெற்று இந்த எஸ்.ஓ.பி. வெளியிடப்படுவதாக அவர் தெரிவித்தார்.

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# SKN FINANCIAL

www.sknfinancial.com



அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

**கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்**

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மசின் வாங்குவதில் பணச்சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..[2% முதல்]
நிறைந்த பெறுமதி!...
www.sknfinancial.com

**SCARBOROUGH**
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

**BRAMPTON**
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

## எதிர்வரும் ஞாயிறு 30ம் திகதி காலை பிறம்ரன் மாநகரத்தில் இருந்து ஒட்டாவா பாராளுமன்றத்தை நோக்கிய நீதிக்கான நெடும் பயணத்திற்கு எமது மக்களின் ஆதரவு அவசியம்.

# சிங்கள அரசால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது தாயக உறவுகளுக்காக நீதி கேட்போம்! அயராது போராடுவோம்!!

பிறம்ரன் மாநகரத்தில் இருந்து ஒட்டாவா பாராளுமன்றத்தை நோக்கி 30-08-2020 அன்று ஞாயிறு காலை 10 மணிக்கு பிறம்ரன் மேயர் பற்றிக் பிறவுண் அவர்களால் தொடக்கி வைக்கப்படும் நீதிக்கான நெடும் பயணத்தில் அனைத்து ஊர்ச்சங்கங்கள், விளையாட்டு சங்கங்கள், முதியோர் அமைப்புக்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன். வேண்டுகின்றோம்.

அன்பார்ந்த கனடா வாழ் தமிழ் மக்களுக்கும், குறிப்பாக ரொறன்ரோ பெரும்பகுதி, மற்றும் நகரில் மார்க்கம் வீதி மற்றும் 14ம் அவென்யு சந்திப்பில் ஒன்ராறியோ பாராளுமன்ற உறுப்பினர் மதிப்புக்குரிய லோகன்கணபதி அவர்களும் நகரபிதா மற்றும் நகரசபை உறுப்பினர்களும் ,பொதுமக்களும் பெரும் எழுச்சி வரவேற்புடன் நெடும் நடைபயணம் ஒட்டாவ நோக்கி மீண்டும் தொடரும்.

நீதி கேட்கும் நெடும் பயணத்தின் அடையாளமாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தால் கறுப்பு, மஞ்சள் நிறங்களில், தயாரிக்கப்பெற்று எமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை விபரிக்கும் வாசகங்கள் உள்ளடங்கிய ரீ சேட்டுக்கள் அச்சிட்டு விற்பனை செய்கின்றோம், அனைவரும் 20 டாலர்கள் கொடுத்து வாங்கி எமது நடை பயணத்திற்கான நிதித் தேவைகளுக்கு கைகொடுக்குமாறும் தாழ்மையுடன் வேண்டுவதுடன் ஒவ்வொரு தரிப்பிடத்திற்கு தமிழ் தேசிய அமைப்புகள், ஊர்சங்கங்கள், பொதுமக்கள் ஆகியோர் தவறாது வந்து ஊக்கப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றோம். சேர்ந்து நடப்பவர்கள் எம்மோடு தொடர்பு கொள்ளுமாறு உரிமையுடன் அழைக்கின்றோம். நெடுபயணத்திற்குரிய வழிப் பாதை கிழே காணப்படுகின்றது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஆதரவில் நடைபெறும் நீதிக்கான நெடும் பயணத்தின் முதலாவது நாள்- காலை 10 மணிக்கு பிறம்ரன் மாநகரசபை மண்டப முன்றலில் இருந்து ஆரம்பமாகி Steeles Ave வீதி வழியே Middlefield & 14 th Ave இல் அமைந்துள்ள Aaniin சனசமூக நிலையத்தைச் சென்றடையும்.

இரண்டாவது நாள் 31-08-20 அன்று மார்க்கம் ஆனின் சனசமூக நிலையத்தில் இருந்து காலை 9 மணிக்கு புறப்பட்டு மார்க்கம் & ஸ்ரில்ஸ் அவனியூவில் 10.30 மணியளவில் மக்களுடனான ஒன்று கூடல் நடைபெற்றதன் பின் ஸ்ரில்ஸ் வழியாக 35 கி.மீ தூரத்தில் உள்ள ஒஸ்சாவாவை நீதிக்கான நெடும் பயணம் சென்றடையும்.

3வது நாளான 01-செப்-2020 அன்று ஒஸ்சாவாவில் இருந்து புறப்பட்டு டூர்ஹாம் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள 1489 Ganaraska Road இல் முடிவடையும்.

4 நான்காவது நாளான 02-09-2020 அன்று 1489 Ganaraska ,இல் இருந்து புறப்பட்டு 35 கி மீ தூரத்தில் உள்ள Fennel இல் முடிவடையும்

5 வது நாளான 03-09-2020 அன்று Fenella இல் இருந்து புறப்பட்டு HWY 7 இல் உள்ள நோர்வூட்டில் முடிவடையும்.

6 வது நாளான 04-09-2020 அன்று நோர்வூட்டில் இருந்து புறப்பட்டு 35 km தொலைவில் உள்ள Madoc இல் முடிவடையும்.

7 வது நாளான 05-09-2020 அன்று Madoc இல் இருந்து புறப்பட்டு, HWY 7 இல் நேரே உள்ள கலடர் என்ற கிராமத்தில் முடிவடையும்.

8 வது நாளான் 06-09-2020 அன்று கலடர் (Kaladar) இல் இருந்து புறப்பட்டு HWY 7 இல் நேரே உள்ள Ungava என்ற கிராமத்தில் முடிவடையும்.

9 வது நாளான 07-09-2020 அன்று Ungava இல் இருந்து புறப்பட்டு HWY 7 இல் உள்ள பேத் (Perth ) என்ற கிராமத்தில் முடிவடையும்.

10 வது நாளான 08-09-2020 அன்று Perth இல் இருந்து புறப்பட்டு Ashton கிராமத்தைச் சென்றடையும்.

11 வது நாளான 09-09-2020 அன்று Ashton இல் இருந்து புறப்பட்டு Barrhaven சென்றடையும்.

12ம் நாளான 10-09-2020 அன்று Barrhaven இல் இருந்து ஒட்டாவா Parliament Hill ஐ சென்றடையும்.

இவ்வண்ணம்,
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் 647 262 5587

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

ALL DEBT SOLUTIONS C R PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்னது மகிழுந்து, விடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York


WALKING FOR JUSTICE
From Brampton City Hall
To Ottawa Parliament Hill
Join us on August 30th @ 10 am
Address: 2 Wellington St W, Brampton, ON L6Y 4R2
WE DEMAND JUSTICE FOR TAMIL FAMILIES OF THE DISAPPEARED
Sri Lanka has the second-highest number of enforced disappearances in the world. Over 100,000 people, mostly Tamils, have been disappeared by the state. Eleven years after the end of the war, Tamil families are still searching for their loved ones.
வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட
உறவுகளை தேடி
நீதி கேட்டு
ஒட்டாவா நோக்கி
கால் நடைப்பயணம்
மகாலிங்கம் மகாஜெயம்: 647 262-5587
விஜிதரன் வரதராஜா: 647 783-3466
மாதகல் கண்ணன்: 647 808-7766


SHIRIDI SAI SCHOOL
OF CANADA
ADMISSIONS
OPEN FOR
I/S KINDERGARTEN TO GRADE 6
TO REGISTER YOUR INTEREST PLEASE CALL
416-298-3030
2701 MARKHAM ROAD, SCARBOROUGH


அம்மா
Amma Pawn Broker
தங்க நகை அடைவு மாடம்
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி
செய்யப்பட்ட முதன்மையான அடைவுச்சேவை
உங்கள் பழைய
நகைகளை அதியுயர்
பெறுமானத்திற்கு எம்மிடம்
விற்றுக்கொள்ளலாம்
உங்கள் நகைகளுக்கு அதிகூடிய பெறுமதியையும்
மிகக்க குறைந்த வட்டி வீதத்தையும் பெற்றுக்கொள்ள
நகரின் மத்தியில் ஒரே நிறுவனம்
105A - 2425 Eglinton Ave. E, Scarborough
ammapawnbroker@gmail.com
கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத் தரிப்பிடங்கள் உண்டு
Shankar& Co. வுக்கு அருகாமையில்
1.5% முதல்
2.0%
வட்டி மட்டுமே
(per month)
416-757-0034
416-994-3861
எவ்வளவு தொகையானாலும்
மிகக் குறைந்த வட்டியுடன்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்





**Location:**
- 15 minutes from Stouffville
- 20 minutes from Ajax
- 30 minutes from Markham

**Incentives for Semi's:**
- $10,000 in décor dollars
- Stainless Steel appliance package
- 5" hardwood on the main floor

**Deposit Structure for Semi's:**
- $20,000 on signing
- $5,000/mo for 10 months
- Total Deposit: $70,000

## The Perfect Home For Your Family/Investment

முற்பதிவுக்கு இன்றே அழையுங்கள்:
416-888-5730



Mersadies Burton Cecilia Laraleyva Ann Nguyen

MM HOMES TEAM

## MATHAN MARKANDU

SALES REPRESENTATIVE
CENTURY 21 LEADING EDGE REALTY INC., BROKERAGE*

Direct: 416-888-5730
Office: 905-471-2121
Fax: 905-471-0832

165 Main Street North,
Markham, ON, L3P 1Y2
www.mmhomes.ca



C21


TNEXT Communication 's
Tamil Fest
தமிழர் தெரு விழா
6th TAMIL FEST
LIVE VIRTUAL CONCERT 2020
Aug 29 -10.30 Am to 2.30 Pm
Aug 30 -11 Am to 2.30 Pm
GUEST SPEAKERS
KAMBAVARITHI ILANGAI JEYARAJ
REV.JEGATH GASPAR RAJ
VIEW LIVESTREAM ON:
Visit :Tamilfest.ca
agni
OFFICIAL PERFORMERS
SINGER MANO
SINGER HARICHARAN
SRUTHI BALAMURALI
JESSICA JUDES
SUPER SINGER SINMAYE
PIRATHA KANTHAPPU
JEYANTHAN KANTHAPPU
COMEDY BY SANDHYA
COMEDY BY AADHAVAN
TITLE SPONSOR
TNEXT Communication
POWERED BY
iConnect
HOSTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
SUPPORTED BY
Canada
TORONTO
MEDIA SPONSOR
ATN
SILVER SPONSORS
EMPREUS HOMES
Formula Honda
Where You're Treated like Family.
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Future Realty Inc.
JC BANQUET & CONVENTION CENTRE
Life 100
INSURANCE & INVESTMENTS INC
VIBRANT HOSPITALITY GROUP
416.240.0078
tamilfest@canadiantamilcongress.ca
tamilfest.ca
#tamilfestTO
@tamilfest.ca








Family Health Team

# Carefirst Family Health Team


## Accepting New Patients

## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com

மலேசிய மடல்

# மலேசிய அரசியல் சாசனமும் இந்திய தோட்டத் தொழிலாளர்களும்



நக்கீரன்

கோலாலம்பூர், ஆக.27:

மலேசிய இந்திய சமுதாயத்தில் இன்றைய காலக்கட்டத்தில் நகர்ப்புற ஏழை மக்களாக இலட்சக் கணக்கானோர் அல்லல்படுவதற்கு முகாந்திரமான காரணம், தோட்டப் பாட்டாளிகளை அன்றைய காலக்கட்டத்தில் ஒட்டுமொத்தமாக கைவிட்டதுதான்.

மலாயாக் கூட்டமைப்பு என்ற பெயரில் அறுபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னம் இந்த மலைத்திருநாடு விடுதலைப் பெற்றது. இன்று நாம் வாழும் சுதந்திர வாழ்க்கைக்கு அடித்தளமிட்ட அந்த வரலாற்று நிகழ்ச்சியை 'வளமான மலேசியா' என்னும் பெயரில் அறுபதாவது முறையாக இன்னும் ஒரு சில நாட்களில், இம்மாத நிறைவில் கொண்டாட இருக்கிறோம்.




அவ்வண்ணம், 1957-ஆம் ஆண்டில் ஆகஸ்ட் திங்கள் 31-ஆம் நாளில் நாம் சுதந்திரம் பெறுவதற்கு நான்கு நாட்களுக்கு முன், 27-08-1957இல் மலாயா அரசியல் சாசனம் நிறைவேற்றப்பட்டது.

அதில் நமக்கெல்லாம் மகிழ்ச்சிதான் என்றாலும் இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் கைவிடப்பட்ட நாளும் ஏறக்குறைய அந்த நாள்தான். இந்த மண்ணிற்கும் தமிழர்களுக்கும் உள்ள உறவு ஈராயிர ஆண்டுகளுக்கு முன் தொடங்கியது என்றாலும் அதில் இடையில் ஏற்பட்டுவிட்ட நெடிய தொய்-விற்குப் பின், அந்த உறவைப் புதுப்பித்துத் தந்ததில் நாம் ஆங்கிலேயர்களுக்கு நன்றி சொல்லத்தான் வேண்டும்.

அதேவேளை, அப்படிப்பட்ட நல்ல எண்ணமெல்லாம் அன்றைய ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கு இருந்ததில்லை. இயற்கை வள நாடாகவும் வேளாண் தொழில் நாடாகவும் இருந்த அன்றைய மலாயாவில், ரப்பர் மரத் தோட்டங்-களிலும் செம்பனைத் தோட்டங்களிலும் குறைந்த ஊதியத்தில் நிறைந்த உழைப்பைச் சுரண்டும் நோக்கத்தில்தான் தென்னிந்தியர்களை குறிப்பாக தமிழர்களை கப்பல் கப்பலாக பல வகையாலும் இங்கு அழைத்து வந்தது அன்றைய ஆங்கிலேய நிருவாகம்.

விடியற்காலையில் தோட்டத்திற்கு அழைத்து, வியர்வை சிந்தச்சிந்த.. .. இரத்தம் சொட்டச்சொட்ட வேலை வாங்கினான் மாலை வேளையிலோ கள்ளுக்கடைப் பக்கம் திருப்பிவிட்டு, தமிழப் பாட்டாளிகளை சிந்திக்க விடாமல் பார்த்துக் கொண்டான். தங்களை நல்லவர்களாகக் காட்டிக் கொள்ள கல்விச் சாலைகளை அரையும் குறையுமாக அமைத்துத்தந்து தன் பொல்லாத் தனத்திற்கு திரைபோட்டுக் கொண்டான்.

அப்படிப்பட்டவன் இந்த மண்ணைவிட்டு வெளியேறும் காலம் நெருங்கிய போது, இந்த மண்ணுக்கேற்ற அரசியல் சாசனம் வரையப்பட்டது. அப்போது, காலங்காலமாக தோட்டங்களிலேயே உழன்று தம் வாழ்வைத் தொலைத்த இந்தத் தமிழர்கள், மலாயா விடுதலைக்குப் பின் மற்ற இனங்களுடன் சக வாழ்வும்



பொருளாதார அளவில் சுகவாழ்வும் வாழ வேண்டுமே என்ற எண்ணமெல்லாம் இல்லாமல், அப்படியே கைகழுவிவிட்டுச் சென்றான்.

காட்டையும் மேட்டையும் திருத்தி நல்கழனியாக சமைத்த தமிழனுக்கு அரசியல் சாசன அடிப்படையில் எந்த உறுதியும் வாய்ப்பும் ஏற்படுத்தப் படாமல் தோட்டப் பாட்டாளிகளை கைவிட்டுச் சென்றதில் ஆங்கிலேய-னுக்கு கொஞ்சமும் மனம் உறுத்தவில்லை. அவர்களின் உழைப்பைச் சுரண்டவும் பெரும்பொருளீட்டவும் முனைந்த ஆங்கிலேயன், தோட்டப் பாட்டாளிகளின் உரிமைக்காக குரல் கொடுத்த 'மலாயா' கணபதி, வீரசேனன் போன்ற மறவர்களை ஒழித்துக் கட்டுவதில் மட்டும் முனைப்பு காட்டினான் அதற்கேற்ப காட்டிக் கொடுப்போரை துணைக் கொண்டான். எல்லாப் பிரச்னைகளுக்கும் மலாயா அரசியல் சாசனத்தால் தீர்வு காணப்பட்ட நிலையில், தோட்டப் பாட்டாளித் தமிழர்களின் எதிர்காலம் குறித்து மட்டும் ஒரு தரப்பும் அக்கறைப்படவில்லை.

நாடு விடுதலைப் பெறுவதற்கு பத்து ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப் பட்ட மஇகா-விற்கு அந்த சமயத்தில் வயது பத்து. அண்மையில் எழுபதாவது ஆண்டு விழாவைக் கொண்டாடி முடித்துவிட்டு, அடுத்து பவள விழாவையும் 15-ஆவது பொதுத் தேர்தலையும் எதிர்கொண்டிருக்கும் இந்த தாய்க்கட்சி-யைப் பற்றி



நாளைய சமுதாயம் வரையறுக்கும். .

பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டிலும் தோட்டப் பாட்டாளிகள் பட்ட பாட்டிற்கு பலன் இல்லாமலேயே, இன்று மூன்றாவது, நான்காவது தலைமுறையினர் உருவாகிவிட்டனர். மலேசியவாழ் தோட்டப் பாட்டாளிப் பரம்பரையினரைப் பொறுத்தமட்டில், 27-08-1957இல் மலேசியக் கூட்டரசு அரசியல் சாசனம் நடைமுறைக்கு வந்தது, ஒரு வரலாற்றுச் சம்பவம்: அவ்வளவுதான்.

கொண்டவனும் கைவிட்டான் கண்டவனும் மறந்துவிட்டான். நாளைய உலகின் கணக்கு என்னவென்று காலம் உணர்த்தும்.

உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவீதத்தில் அடைவு பிடிக்கப்படும்



PAWN BROKERING

பழைய பவுண்கள் நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளப்படும்

Cash Point

துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.



Cash Point

3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000

# LEASE TO OWN



$58.88 WEEKLY +TAX

2020 COROLLA L CVT

1.69% LEASE FOR 60 MONTHS, 20,000 km/year

# LEASE TO OWN



$88 WEEKLY +TAX

2020 RAV-4 LE FWD

4.99% LEASE FOR 60 MONTHS, 20,000 km/year

# USED CARS

**COROLLA - 10 IN STOCK**
From $10,600 + tax - 2012 & up

**CAMRY - 10 IN STOCK**
From $17,700 + tax - 2015 & up

**RAV-4 - 15 IN STOCK**
From $14,500 + tax - 2012 & up

**SIENNA - 5 IN STOCK**
From $30,363 + tax - 2017 & up

# USED VEHICLES

HONDA LEXUS BMW LAND ROVER

# YORKDALE TOYOTA

3080 Dufferin Street
Toronto, ON M6A 2S6

**Dufferin & Lawrence**

www.yorkdaletoyota.com

NO CREDIT BAD CREDIT NO PROBLEM!

# LEASE TO OWN



$90 WEEKLY +TAX

2020 CAMRY SE

0% LEASE FOR 39 MONTHS, 20,000 km/year

FOR TONY SIVA'S CLIENTS!!!

$500 GAS CARD

GAS CARD

with every purchase of New or Used Vehicle

$0 DOWN on New or Used Vehicles

புதிய பாவித்த வாகனங்களை தமிழில் உரையாடி மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்



Tony Siva

647-269-0749 tonymidtown@hotmail.com

www.yorkdaletoyota.com

# இராசபக்ச பேரலை மற்றும் இராசபக்சவுக்கு எதிரான சுனாமிச் சுவர்

- எழுதியவர் திசாராணி குணசேகர
(Colombo Telegraph இணையத்தில் வெளிவந்த ஆங்கிலக் கட்டுரை)
தமிழாக்கம் கனடா-நக்கீரன்



"நீங்கள் வைத்திருக்கும் பறவை இறந்துவிட்டதா அல்லது உயிருடன் இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது, ஆனால் எனக்குத் தெரிந்த விடயம் என்னவென்றால் அது உங்கள் கைகளில் உள்ளது. அது உங்கள் கைகளில் உள்ளது ....." ரோனி மோரிசன் (Tony Morrison (Nobel Acceptance Speech) நோபல் பரிசு பெற்ற போது ஆற்றிய ஏற்புரை).

இராசபக்சாக்கள் அவசரத்தில் உள்ளனர். அவர்கள் ஒரு அரசியலமைப்பை உருவாக்க வேண்டும். மற்றும் ஒரு நாட்டை மீள உருவாக்க வேண்டும். தற்போது, இரு இடங்களுக்கும் செல்லும் பாதை ஒரு நெடுஞ்சாலை போல அகலமாகவும் தெளிவாகவும் தெரிகிறது. ஆயினும், அந்த இணக்கமான மென்மையின் அடியில் பதுங்கியிருப்பது கட்டமைப்பு ரீதியான முரட்டுத்தனமாகும். இது இறுதியில் இராசபக்ச திட்டத்தை தாமதப்படுத்தி கடைசியில் அதனை வெளிக்காட்டும் சாத்தியம் காணப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா பொதுசன பெரமுன (SLPP) ஏற்படுத்திய பூகம்பமே பேரலை ஆக மாறி ஐக்கிய தேசியக் கட்சிக்குள் (UNP) பிளவுகளை ஏற்படுத்தியது. யூஎன்பி பிளவுபடாமல் இருந்திருந்தால், இராசபக்சாக்கள் சாதாரண பெரும்பான்மை வாக்குகளால் வென்றிருப்பார்கள்.

2019 ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலுக்கும் 2020 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கும் இடையில் இராசபக்ச ஆதரவுத் தளம் அதிகரிக்கவில்லை. உண்மையில் இது 70,500 க்கும் மேற்பட்ட வாக்குகளால் குறைந்துள்ளது. எதிர்க்கட்சிகளுக்கு ஏற்பட்ட பாரிய இழப்புகளைப் பார்க்கும்போது, எண்ணிக்கையிலும் அரசியல் ரீதியாகவும் இது மிகச்சிறியதாகத் தோன்றும். ஆனால் தேர்தலின் போக்கு முக்கியமானது - கோட்டாபய இராசபக்சவின் ஏழு மாத ஆட்சி இராசபக்சவின் ஆதரவு தளத்தை விரிவாக்குவதில் வெற்றிபெறவில்லை.

மாவட்ட அளவிலான ஆய்வு ஒரு தெளிவான படத்தை வழங்குகிறது. 2019 மற்றும் 2020 க்கு இடையில் பதினொரு மாவட்டங்களில் சிறிலங்கா பொது சன பெரமுன வாக்கு எண்ணிக்கை குறைந்துள்ளது. கொழும்பு (53,110), கம்பாஹா (47,974), காலி (35,709), களுத்துறை (34.221), மாத்தறை (22.264), புத்தளம் (10,194), அம்பாறை (9,046), மட்டக்களப்பு 5,044), குருநாகல் (2313), இரத்னபுரி (1,376), மொனராகலா (629) ஆகியவையே அந்த மாவட்டங்களாகும்.

சிறிலங்கா பெருமுனைக்கு வாக்கு எண்ணிக்கை அதிகரித்த 11 மாவட்டங்களில், நுவரேலியா (55,261), பொலநறுவை (33,507), மற்றும் பதுளை (33,327) ஆகிய மூன்றும் குறிப்பிடத்தக்கனவாகும்.

ஆதாயங்கள் மற்றும் இழப்புகளில் காணப்படும் முறை ஒரு பாடத்தை அறிவுறுத்துகிறது. இராசபச்சாக்களின் இழப்புகளில் பெரும்பாலானவை சிங்கள-பவுத்த பெரும்பான்மை மாவட்டங்களில் காணப்பட்டன. சிறிலங்கா பொதுசன பெருமுன மற்றக் கட்சிகளுடன் உருவாக்கிய கூட்டணியின் விளைவாக அதற்கு முக்கிய இலாபங்கள் கிடைத்தன - குறிப்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (நுவரேலியா மற்றும் பதுளை) மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி (முன்னாள் சனாதிபதி மைத்திரிபால சிறிசேனா விருப்பு வாக்குப் பட்டியலில் முதலிடம் பிடித்த பொலநறுவை).

ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்பட்ட உடைசல் பொதுசன பெரமுனை-யின் தேசிய வாக்கு இழப்பை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையாக மாற்ற முடிந்தது. இதையிட்டு இரணில் விக்ரமசிங்காவோ அல்லது சஜித் பி-ரேமதாசாவோ கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்களுக்கு இடை-யிலான தலைமைப் போட்டி இராசபக்சாக்களைத் தவிர வேறு எவரையும் பலப்படுத்தவில்லை. இது இராசபக்சாக்களுக்குத் தெரியும். அதுவும் - பொருளா-தார நெருக்கடி ஏற்படுவதற்கு முன்னர் நகர வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருக்கிறது. அதனால்தான் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்த தலைதெறிக்க ஓடுகிறார்கள். மேலும் புதிய அரசியலமைப்பை உருவாக்கும் வரை அவர்கள் ஓடுகிற வேகத்தை நிறுத்த மாட்டார்கள்.

இலங்கையைக் குடும்ப அரசாக மாற்றுவதற்கான பயணத்தின் முதல் படி 19 வது சட்ட திருத்தத்தை ஒழிப்பதாகும். இது கோட்டாபய இராசபக்சவின் கைகளில் அதிக அதிகாரத்தை குவிக்கும். மேலும் பசில் இராசபக்சவை தேசிய பட்டியல் வழியாக நாடாளுமன்றத்திற்குள் நுழைய உதவும் (2007 ல் அவர் முதன்முறையாக நாடாளுமன்றத்தில் நுழைந்தது அப்படித்தான்). சுயாதீன ஆணையங்களைத் தடுப்பதன் மூலம், நீதித்துறையை நிறைவேற்று அதிகாரம் படைத்த சனாதிபதிக்கு அடிபணியச் செய்ய முடியும், மேலும் நாடு அப்பட்டமாக சுதந்திரமற்ற, நியாயமற்ற மற்றும் வன்முறைத் தேர்தல்களுக்கு திரும்பக்கூடும்.

19 ஆவது திருத்தத்தை நீக்குவது தவிர்க்க முடியாதது என்றாலும், எதிர்க்கட்சிகள் அந்த நகர்வுக்கு இலவச அனுமதி கொடுத்தால் அது ஆபத்தில் முடியும். நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் 20 ஆவது திருத்தத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகள் போராட வேண்டும். திருத்தத்தைத் தோற்கடிப்பதற்கான வாக்குப்பலம் அதற்கு இல்லை, ஆனால் அதை அம்பலப்படுத்தவும் மதிப்பிழக்கவும் அதற்கு வல்லமை இருக்கிறது. இந்தத் திருத்தம் சாத்தியமான அளவுக்கு மேலாக அத்துமீறலகளைக் கொண்டிருக்கலாம். அதையிட்டு நீதித்துறையிடம் முறையிடலாம். மிக முக்கியமாக, 19 வது திருத்தத்தின் ஆதாயங்களைப் பாதுகாப்பது என்பது ஒரு முழக்கம், முழு எதிர்ப்பையும் ஒன்றிணைக்கக் கூடிய ஒரு குறிக்கோள். இராசபக்ச ஆட்சியைத் தோற்கடிக்க நீண்ட, கடினமான ஆனால் அவசியமான போராட்டத்தைத் தொடங்க வேண்டிய இடம் இது.

19 ஆவது திருத்தத்தைப் பாதுகாப்பதில் உற்சாகமான சட்ட, அரசி-யல் மற்றும் பரப்புரை போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் தனிப்பட்ட எதிர்க்கட்சிகள் தங்கள் தளங்களை வலுப்படுத்தவும் விரிவுபடுத்தவும் முடியும். ஐக்கிய மக்கள் சக்தி முக்கிய எதிர்க்கட்சியாகச் செயல்படுவதற்கான திறனை எண்பிப்பதற்கான ஒரு சோதனை இதுவாகும். தேசிய மக்கள் சக்தி யைப் பொறுத்தவரை, அது சனநாயகத்தைப் பாதுகாப்பதில் ஒரு தேசிய போராட்டத்தை வழிநடத்த முடியும் என்பதை இராசபக்ச - விரோத இலங்கையர்களுக்குக் காட்ட ஒரு வாய்ப்பு ஆகும். வெளியேற்றப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை, வெறுப்பினால் தங்கள் வாக்குகளைப் போடா-மல் ஒதுங்கியவர்களை அல்லது (வாக்குகளை) பழுதாக்கிய வாக்காளர்களை மீண்டும் வென்றெடுப்பதற்கு கடைசி வாய்ப்பை இது வழங்குகிறது.

13 ஆவது திருத்தம், புதிய அரசியலமைப்பு மற்றும் வாக்கெடுப்பு.

19 வது திருத்தத்தை நீக்கினால் சனாதிபதியை 2010 மற்றும் 2015 க்கு இடையில் இருந்ததைப் போலவே சக்திவாய்ந்ததாக ஆக்கும், ஆனால் இராசபக்ச சகோதரர்களது நோக்கங்களுக்கு இது போதாது. பழைய அரசியலமைப்பு இரண்டு காரணங்களுக்காக நீக்கப்பட வேண்டும். ஒன்று, ஒரு புதிய தேர்தல் முறையின் தேவை, இது இராபச்சர்களுக்கு நாடாளுமன்றத்தில் பாரிய பெரும்பான்மையைப் பெற உதவும், அவர்களின் ஆதரவுத் தளம் அரைவாசிக்கு கீழே குறைந்துவிட்ட பின்னரும் கூட. மற்றது 13 ஆவது திருத்தத்தை நீக்கிவிட வேண்டிய அவசியம்.

தற்போதுள்ள அரசியலமைப்பு புதிய அரசியலமைப்பால் மாற்றப்பட்டால், 13 ஆவது திருத்தம் இருக்காது. அது போல 1972 ஆம் ஆண்டில் ஐக்கிய முன்னணி (UF) அரசாங்கம் இதைத்தான் செய்தது. 1966 இல் பிரிவி கவுன்சில் சோல்பரி அரசியலமைப்பின் 29 வது பிரிவு சிறுபான்மையினரது உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கிறது எனத் தீர்ப்பளித்ததால், ஐக்கிய முன்னணி அரசு நாடாளுமன்றத்தை அரசியல் நிருணய சபையாக மாற்றி ஒரு புதிய அரசி-யல் யாப்பை இயற்றியது. இலங்கையின் புகழ்பெற்ற வரலாற்றாசிரியர் பேராசி-ரியர் கே.எம். டி சில்வா சுட்டிக்காட்டியபடி, "சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரை, இலங்கைத் தீவின் தீவிர சிங்கள - பவுத்த ஆதிக்கத்தின் தடையற்ற வெளிப்பாட்டாக இருந்தது. இதனால் ஒரு அரசியல் நிருணய சபையின் மூலம் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு போதுமான நியா-யமாக இருந்தது" (சிறிலங்கா / இலங்கை - புதிய குடியரசு அரசியலமைப்பு).

கோட்டாபய - மகிந்தா அரசாங்கம் வெளிப்படையான சிங்கள-பவுத்த மேலாதிக்கவாத அரசாங்கம் ஆகும். ஆனால் 13 ஆவது திருத்தத்தை ஒழித்துக் கட்ட விரும்புவதற்கு அதுமட்டும் ஒரு காரணம் அல்ல. அவர்கள் 13 ஆவது திருத்தத்திலிருந்து விடுபட விரும்புவதற்குக் காரணம் அது அவர்களின் அதி-காரக் குவிப்பு மற்றும் முறைகேட்டுக்கு ஒரு தடையாகும்.

13 ஆவது திருத்தத்தின் சனநாயக மயமாக்கல் அம்சங்கள் பொதுவாகக் கவனிக்கப்படுவதில்லை, அது இராசபக்சர்களால் மட்டும் அல்ல. 13 ஆவது திருத்தம் தான், 2012 ஆம் ஆண்டில் இராசபக்சாக்கள் ஒரு சிறிலங்கா நிருவாகத்தில் இதுவரை முயற்சிக்கப்படாத மிகவும் தீங்கு விளைவிக்கும் மற்றும் அநீதியான சட்டத்தை இயற்றுவதைத் தடுத்தது - புனித பகுதிகள் சட்டம் என்று பிரபலமாக அறியப்பட்ட நகர மற்றும் நாடு திட்டமிடல் (திருத்தம்) மசோதா.

இந்தச் சட்டம் 4 பக்கங்கள் மற்றும் 8 உட்பிரிவுகளைக் கொண்டிருந்தது. அது இராசபக்சாக்களுக்கு ஒவ்வொரு அங்குல தனியார் நிலத்தின் மீதும் முழுமையான கட்டுப்பாட்டை வழங்குவதற்காக வரையப்பட்டது. எந்தவொரு நிலத்தையும் கட்டிடத்தையும் கையகப்படுத்த புத்த சாசன மற்றும் மத விவகார அமைச்சருக்கு அதிகாரம் அளித்தது - ஒரு பாதுகாப்புப் பகுதி, வீணாவதைத் தடுத்துப் பேணுதல் பகுதி, ஒரு கட்டடக்கலை அல்லது வரலாற்றுப் பகுதி அல்லது ஒரு புனித பகுதி. அதற்குத் தேவையானது ஒரு சிட்டை மற்றும் வர்த்தமானி அறிவிப்பு மட்டுமே. பாதிக்கப்பட்டவருக்கு சட்டத்தினால் எந்த உதவியும் இல்லை.

நாடாளுமன்றத்தில் இராசபக்சாக்களுக்குப் பெரும்பான்மை இருந்தது, அதனால் அந்தச் சட்டம் முடிந்த முடிவு என நினைத்தார்கள். ஆனால் கொள்கைக்கான மாற்று மையம் (CPA) உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க தலைமையிலான ஆயம் (bench) இந்தச் சட்டத்திற்கு எதிராகத் தீர்ப்பளித்தது. 13 வது திருத்தத்தின் கீழ், காணி ஒரு பகிர்ந்தளிக்கப்பட்ட விடயமாகும். 13 ஆவது திருத்தம் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்கள் குறித்த சட்டத்திற்கு அனைத்து மாகாண சபைகளின் ஒப்புதலும் தேவை என்று தெளிவாகக் கூறுகிறது.

உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கியபோது இந்தச் சட்டம் ஏற்கனவே நாடாளுமன்ற உத்தரவுத் தாளில் இருந்தது. அரசாங்கம் இந்தச் சட்டத்தை மாகாண சபைகளின் ஒப்புதலுக்காக அனுப்பியது. இது ஒரு சாதாரண சம்பிரதாயமாகக் காணப்பட்டது, ஏனெனில் வடக்கு மாகாண சபை நீங்கலாக மற்ற அனைத்து சபைகளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் (UPFA) கட்டுப்பாட்டில் இருந்தன.

வட மத்திய மாகாண சபை இந்தச் சட்டம் குறித்து விவாதிக்க அவ-காசம் தேவை எனச் சொன்னது. கிழக்கு மாகாண சபை அதனை ஏற்க மறுத்துவிட்டது. இறுதியில் இராசபக்சாக்களுக்கு இந்தச் சட்ட முன்மொழிவை திரும்பப் பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

13 வது திருத்தத்தின் சர்வாதிகார எதிர்ப்பு அம்சங்களை இராசபக்சாக்கள் கசப்பான அனுபவத்தின் மூலம் அறிந்து கொண்டவர்கள். புதிய அரசியலமைப்பு 13 ஆவது திருத்தத்தின் இறப்பை உறுதி செய்யும். இராசபக்சாக்கள் அதைக் கொல்ல மேலதிக முயற்சி செய்யத் தேவையில்லை. இந்தியாவை சமாதானப்படுத்தவும் தமிழர் நட்பு நாடுகளுக்கு ஒரு பொய்க் கவசமாக பிடித்துக் கொள்வதற்கும் இராசபக்சாக்கள் மாகாண சபை முறையை வெறும் ஓடாக வைத்திருப்பார்கள். (ஒரு புதிய அரசியலமைப்பின் மற்றொரு நன்மை, புனித பகுதிகள் சட்டம் போன்ற ஆசைத் திட்டங்களை அதில் எழுதும் திறன் ஆகும்). அரசியலமைப்பு ரீதியாக, பொதுவாக்கெடுப்பு இல்லாமல் புதிய அரசியலமைப்பை இயற்ற முடியாது. அந்த இடத்தில்தான் இராசபக்சாக்கள் பாதிக்கப்படக் கூடியவர்களாக இருக்க முடியும். ஒன்றுபட்ட எதிர்க்கட்சி பொதுவாக்கெடுப்பை இராசபக்சாக்களுக்கு முடிந்தவரை ஒறுப்பாக மாற்ற முடியும். இது இராசபக்சாக்களுக்கு விரோதமாக இருக்கும் 47% மக்களை ஒன்று திரட்டுவதற்கும் பயன்படுத்தலாம். மேலும் இராசபக்சாக்களை நசுக்குவதற்கும் அடித்து வீழ்த்துவதற்கும் பயன்படுத்தலாம். இவை (இராசபக்ச) ஆட்சியின் நீண்ட ஆயுளைப் பாதிக்கச் செய்யும்.

2025 மற்றொரு 2015 ஆக மாறலாம். மற்றும் பயணத்தின் முதல் படி 19 ஆவது திருத்தத்தை பாதுகாக்க நம் சக்தியால் முடிந்த அனைத்தையும் செய்வதாகும்.

எதிர்க்கட்சி எதிர்க்குமா?

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முந்தைய நாள், உதவிக் கண்காணிப்பாளர் சுகத் மோகன் மென்டிஸ் கம்பகா நீதிபதி நீதிமன்றத்தில் ஒரு வாய்மூல அறிக்கையை வெளியிட்டார், கொழும்பு குற்றவியல் பிரிவு (CCD) முன்னாள் புலனாய்வுத்துறை (CID) இயக்குனர் சனி அபயசேகராவுக்கு எதிராகச் சாட்சியங்களைத் தயாரிக்க அழுத்தம் கொடுத்ததாகக் குற்றம் சாட்டினார். அவர் ஒத்துழைக்காவிட்டால் அவரைச் சிறையில் அடைக்கப்போவதாக குற்றவியல் பிரிவு அச்சுறுத்தியது என்று அவர் கூறினார்.

துணைக் கண்காணிப்பாளர் மென்டிஸ் தன்னையும் சீருடையும் அவமதிக்க மறுத்துவிட்டார். அதனால் அவர் கைது செய்யப்பட்டார்.

சில வாரங்களுக்கு முன்பு, கொழும்பு நீதிபதி இரங்கா திசாநாயக்க திறந்த நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் எவ்வாறு தடுத்து வைக்கப்பட்ட வழக்கறிஞர் ஹெஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக ஆதாரங்களைத் தயாரிக்க முயன்றது என்பதை வெளிப்படுத்தினார்.

குற்றவியல் புலானய்வுத் திணைக்களம் மற்றும் கொழும்பு குற்றவியல் பிரிவு அதிகாரிகள் மீது குற்றவியல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க உத்தியோகபூர்வ விசாரணை எதுவும் தொடங்கப்படவில்லை. இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. காரணம் ஷானி அபயசேகரா மற்றும் ஹெஜாஸ் ஹிஸ்புல்லா இருவரும் அரசியல் ரீதியாக ஊக்கமளிக்கப்பட்ட சூனிய வேட்டையில் பாதிக்கப்பட்டவர்கள் ஆவர். ஆச்சரியம் எதிர்க்கட்சியின் மவுனமும் மற்றும் செயலற்ற தன்மையும். இப்போது தேர்தல் முடிந்துவிட்டதால், புதிய எதிர்க்கட்சி இந்தக் குற்றச்சாட்டுகளை நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தி விவாதத்தைக் கோருகுமா?

வடக்கில், நில அபகரிப்பு ஏற்கனவே தொடங்கிவிட்டது. யாழ்ப்பாணத்தில், ஒகஸ்ட் 20 ஆம் தேதி, கடற்படை கண்காணிப்புப் பணிக்காக மீனவருக்குச் சொந்தமான 15 பரப்பு நிலத்தைக் கடற்படை கைப்பற்ற முயன்றது. குடிமக்களது

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

*- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்*

# சிவாஜியும் தமிழ்ச் சினிமாவும்

#10



"கற்றது கடுகளவு; கல்லாதது சிவாஜி அளவு" என்ற புதுமொழிக்கமைய நடிகர் திலகம் அவர்களை எழுதுவதும் - பேசுவதும் விரிவடைந்துகொண்டே போகும்.

இந்த வருடம் ஜூலை 21ல் அவரது 19 ஆவது ஆண்டு நினைவு நாள் தமிழர்கள் வாழும் பல நாடுகளிலும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் அவரிடத்து விருப்பமும் மரியாதையும் உள்ள பல நூறு ரசிகர்களினாலும் தமிழ்மொழி உணர்வாளர்களினாலும் நெகிழ்ச்சியுடன் நினைவு கூறப்பட்டது.

லண்டன், ரொரென்ரோ மற்றும் ஐரோப்பிய நகரங்களில் வாழும் சிவாஜி பிரியர்களும், கூத்துக் கலைஞர்களும், ஊடகவியலாளர்களும்...."சூம்"........ எனும் தொழில்நுட்ப காணொளி வாயிலாகக் கலந்துரையாடி அவர்களின் கலை சிந்தனைகளை பரிமாறிய வண்ணம் பிரம்மிப்பூட்டினார்கள்.

நடிகர்கள் பலநூறு பேர் இருந்தாலும் நடிப்புக் கலை வெற்றிடம் ஆகிவருகிறது. அதுவும் சிவாஜி என்ற மாபெரும் கலைஞன் விட்டுச்சென்ற இடத்தை வாழும் எவராலும் நிரப்ப முடியவில்லையே எனப்பலர் ஆதங்கப்பட்டார்கள்.

குறிப்பாக கடந்த வருடங்களில் மீண்டும் வெளியிடப்பட்ட, புதிய தொழில்நுட்பத்துடன் ஆன சேர்க்கைகள் உடன் இளைய தலைமுறையினரை அடுத்தடுத்த படங்களான "கர்ணன்" "பாசமலர்" "வசந்தமாளிகை" அனைவரையும் பிரமிக்க வைத்ததையும் கண்களில் ஈரம் கொள்ள வைத்ததையும் மறக்க முடியாது.

50 ஆண்டுகளுக்குப் பின்னும் அளப்பரிய வசூல், சாதனை, ரசிகர்கள் எந்த வயதினராக இருந்தாலும் பார்ப்போரை தான் எடுத்துக்கொண்ட பாத்திரத்தோடு ஒன்றி போக வைக்கும் ஆற்றல் சிவாஜி ஒருவருக்கு மட்டுமே கைவந்த கலையாகும்.

"அப்பன் இல்லாவிட்டால் தான் அப்பன் அருமை தெரியும்" என்ற கிராமியப் பேச்சு வழக்கப்படி நடிகர் திலகம் இல்லாத சினிமா வெறிச்சோடிப் போனது அதனால்தான் அவரது நினைவு நாளில் அனைவரினாலும் வணங்கப்படுகிறது. இத்தகைய அமரத்துவ நினைவு போலியான உயிரற்ற சூப்பர் நட்சத்திரங்களை காலப்போக்கில் காணாமல் போக வைத்து விடும் என்பது மறுக்க முடியாத சத்தியம் ஆகும்!

இனி சிவாஜி அவர்களின் இன்னுமொரு பிரம்மாண்டத்தை உங்கள் நினைவுக்கு கொண்டுவந்து காட்சிப்படுத்துவோம். "வணங்காமுடி"- இத்திரைப்படம் 1957 இல் வெளியானது. சரவணபவா யுனிட்டி பிக்சர்ஸ் தயாரிப்பு, இயக்குனர் பி. புல்லையா. சென்னையில் பல திரையரங்குகளிலும் மற்றும் பெரிய நகரங்களிலும் வெற்றிகரமாக ஓடிய படம் இது. குறிப்பாக சென்னை சித்ராவின் (இப்போது பல அரங்குகள் வணிக வளாகங்களாகவும் காம்ப்ளக்ஸ்கள் ஆகவும் உருமாறிவிட்டன). முன் முகப்பில் சுமார் 80 அடி உயரத்துக்கு சிவாஜி அவர்களின் வணங்காமுடி பாத்திர உருவம் ராட்சச முகப்பாக (. கட்அவுட் ) வைக்கப்பட்டிருந்தது. இது முழு இந்திய சினிமா அரங்குகளிலும் முயற்சிக்க படாத சாதனை.

1957இல் சிவாஜி அவர்கள் நடித்து 9 படங்கள் வெளியாகின. "வணங்காமுடி" அவரது 37 வது படமாகும். சினிமா படங்களுக்கு விளம்பர வடிவம் வரைந்து கொடுக்கும் புகழ் பெற்ற நிறுவனங்களில் ஒன்று "மோகன் ஆர்ட்ஸ்". இதன் உரிமையாளர் மோகன் அவர்கள். பாசமலர் படத்தின் தயாரிப்பாளர்களில் ஒருவர். சிவாஜி அவர்களது மிக நெருங்கிய கலையுலக தோழர். பின்னாளில் இந்நிறுவனத்தில் தான் நமது நடிகர் சிவகுமார் அவர்களும் ஓவியராக சிலகாலம் பணிபுரிந்துள்ளார் என்பது ஒரு தகவல்.. பம்பாய் போன்ற பெரிய சினிமா நகரங்களில் இருந்தெல்லாம் சென்னை வந்து சித்ரா தியேட்டருக்கு கம்பீரம் கொடுத்த சிவாஜியின் வீரமும் - கோபமும் நிறைந்த அந்த (கட்டவுட் டை)ப் பார்த்து பிரம்மித்தது வரலாறு!

இனி வணங்காமுடியின் இடம்பெற்ற ஒரு முக்கிய காட்சியைப் பார்ப்போம். தமிழ் இன்பம் தரும் காட்சி அது. இப்படத்திற்கு உரையாடல் எழுதியவர் வித்துவான் ஏ.கே வேலன். சிறந்த உரையாடல் ஆசிரியர்களில் இவரும் ஒருவர். பெரும்பாலும் நடிகர் சிவகுமார், சிவாஜி அவர்கள் பேசிய திரைப்பட வசனங்களை சிறிதும் பிசிறின்றி பேச வல்லவர். ஒருமுறை சிவாஜி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது இல்லத்திற்குச் சென்று வாழ்த்துவதற்கு போயிருந்தார். பேச்சுக்கு இடையே வணங்காமுடியில் இடம்பெற்ற அந்த முக்கிய உரையாடலை பேசிக் காட்டினார். சிவாஜி அவர்கள் வியப்படைந்து "இந்த காட்சி எந்த படத்தில் வருகிறது" என்று வினாவினார்.




"சரியா போச்சு.. இது உங்க வசனம்தான் வணங்காமுடியில் நீங்க பேசியது!" சிவாஜி அவர்களுக்கே மறந்துபோன அந்த வசனம் இதோ!

காட்சி விளக்கம்:-

மன்னன் மகளை சிற்பி சித்திரசேனன் காதலிக்கிறான். தான் அரசகுமாரி என்பதை காதலி மறைத்து விட்டாள். சித்திரசேனன் தந்தையோ மன்னருடைய மெய்க்காப்பாளர். சேனாதிபதியோ சித்திரசேனன் காதலுக்கு எதிரி. அரசகுமாரி சிலை வடிக்கும் சிற்பியை காதலிப்பதை அந்தஸ்து கருதி மன்னர் எதிர்க்கிறார். சித்திரசேனன் சிறை வைக்கப்படுகிறான். மகனை விடுதலை செய்யும்படி தாய் கொலு மண்டபத்தில் மன்றாடுகிறார். இவ்வேளை...

மன்னர்: சேனாதிபதி! சிற்பியை சிறையிலிருந்து அழைத்து வரச் சொல்...!
சேனாதிபதி: மறந்தும் நீ இந்த மண்ணை மிதிக்க கூடாது என்பதே இந்த மன்றத்தின் கட்டளை. (நாடு கடத்தும்படி உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது)
சிற்பி: என்ன! பிறந்த மண்ணை நான் மிதிக்கக்கூடாதா? நான் மழலை பேசி மண்ணில் தவழ்ந்து விளையாடிய என் தாயகத்து மண்ணில் எனக்கு இடம் இல்லையா?
தாய்: ஆம்! மகனே! இந்த நீதிமன்றத்தின் கட்டளை அதுதான்.
சிற்பி: ம்... நீதிமன்ற கட்டளை இந்தக் கட்டளையில் நீதி எங்கே இருக்கிறது தாயே! நான் பிறந்த நாட்டை மறந்து போ என்று சொல்வதற்கு இவர்கள் யார் தங்கத்தமிழ் முழங்கும் சிங்கத்திரு நாட்டை விட்டு விரட்டுவதற்கு இவர்கள் யார் பொங்கிவரும் காவேரி புனலூரி வரும் வைகை நாட்டை விட்டு போவென்று சொல்வதற்கு உரம் படைத்தோர் இவர்கள் யார்? பூ மணக்கும் பொதிகைத் தென்றல், உடல் சிலிர்க்கும் குற்றால தாய் என்னை வெறுத்ததா! பூச்செடியும் வி'ப் பூண்டும் முளைப்பதற்கு இடம் கொடுத்த தரை மாதா என்னை மட்டும் தாங்க மறுத்துவிட்டாளா! உள்ளே பகையும், உதட்டில் தேனும் பூசி வஞ்சம் தீர்க்கும் நஞ்சு எனும் கொடிய உள்ளம் படைத்த வார்த்தை எல்லாம் தீர்ப்பாகி விடுமா? வானத்தை முட்டும் மலை சரிந்தாலும் வையகமே போர்தொடுத்து கடல் எடுத்து விழுங்கினாலும் ஓயமாட்டேன்! அன்று இமயத்தின் உச்சியிலே கொடியேற்றி சென்றான் ஒருவன்! கடலுக்கு அப்பால் வெற்றித் தூண் நிறுத்திச் சென்றான். இன்னொருவன்! கனக விசயன் தலையில் கல் ஏற்றி வந்தான் மற்றொருவன்! கங்கைகொண்டான்! கலிங்கத்துபரணி கண்டான்! என்றெல்லாம் விருது கொண்டோர் எம் முன்னோர்! அவ்வழி வந்தேதான் புகலிடம் தேடி ஓடுவதா? சரித்திரம் கண்ட தமிழகம்! கல்தோன்றி மண்தோன்றா காலத்தே முன் தோன்றிய மூவையகம்! வந்தவர்க்கெல்லாம் இடம் கொடுத்த புண்ணிய பூமி! தான் பெற்ற மகனை அனாதையாக விரட்டியதென்ற அவமானத்தை செய்யாதீர்கள். என் பச்சை இரத்தத்தை வேண்டுமென்றால் எடுத்து பருகுங்கள்! என் உடலை அணுஅணுவாக வெட்டி நான் பிறந்த மண்ணில் மண்ணோடு மண்ணாக புதைத்து விடுங்கள்! ஆனால் என் தாயகத்தை விட்டு மட்டும் என்னை விரட்டாதீர்கள்!

இப்படியெல்லாம் சினிமா என்னும் கலைக்கூடத்தின் தமிழ் ஆசானிடம் கேட்டுப் பேசிய தமிழ் இன்பத்தை தான் உங்களுடன் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

அமரகவி பாரதிக்கு ஓர் விண்ணப்பம் :-
யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்
எனும் தொடர் வரிகளுடன்
பாரதிதாசன் கண்ணதாசன்
கலைக்குரிசில் கணேசன் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை என
புகழ்மணக்க பாடுவதற்கு அனுமதியுங்கள்!

காதல் வீரம் கருணை பாசமுடன் காட்சிகள் விரியும்..
வாசியுங்கள் நேசியுங்கள்.

# இராசபக்ச பேரலை மற்றும் இராசபக்சவுக்கு எதிரான சுனாமிச் சுவர்

*(17ம் பக்கத் தொடர்ச்சி)*

எதிர்ப்பு இப்போதைக்கு இந்த அபகரிப்பைத் தடுத்து நிறுத்தியது, ஆனால் புதிய அரசியலமைப்பு வந்தவுடன், புனிதப் பகுதிகள் சட்டத்தின் விதிகள் அதில் எழுதப்பட்டால், நாட்டில் எங்கும் இதுபோன்ற நில அபகரிப்பு என்பது முற்றிலும் சட்டப்பூர்வமாக மாறிவிடும்.

அந்தப் பேரழிவு ஏற்படும் வரை எதிர்க்கட்சிகள் தமது கைவிரல்களைத் திருகிக்கொண்டு இருக்கப் போகிறதா?

சனாதிபதி கோட்டாபய தனது சங்க ஆலோசனைக் குழுவின் ஆலோசனைகளின் அடிப்படையில் இராசாங்க அமைச்சுக்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன என்று கூறினார். இது சில அமைச்சுகளின் நகைச்சுவையான தன்மையை விளக்குகிறது. புத்த சாசன, மதம் மற்றும் கலாச்சார விவகார அமைச்சின் கீழ் கிறிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாமிய மத விவகாரங்கள் சிங்கள பவுத்த அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் இராசாங்க அமைச்சர்களின் கீழ் கொண்டுவரப் பட்டுள்ளன.

பெண்கள் மற்றும் குழந்தைகள் பற்றிய விடயம் அமைச்சரவை அமைச்சகத்திலிருந்து இராசாங்க அமைச்சகத்திற்கு தரமிறக்கப்பட்டு கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் அதன் முக்கியத்துவம் குறைகிறது. அதற்குப் பொறுப்பான அமைச்சர் ஒரு மேன்மையானவர் அல்லர். எந்தவொரு அமைச்சுப் பகுதியையும் கையாள்வதற்கான தெளிவான தகுதி இல்லாதவர். தரமிறக்கப்பட்ட பிற அமைச்சுளில் வறுமை ஒழிப்பு (சமுர்த்தி) மற்றும் சமூக மேம்பாடு ஆகியவை அடங்கும். தகவல் தொழில்நுட்பம் இல்லாத நிலைக்கு தரமிறக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் தொல்பொருள்த் திணைக்களம் உட்பட 23 நிறுவனங்களை அதன் நேரடி கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. உள்துறை விவகாரங்களும் பாதுகாப்பு அமைச்சகத்துடன் இணைக்கப்பட்டு, அதன் கட்டுப்பாட்டு மாவட்டம் மற்றும் பிரதேச செயலகங்களை (அத்துடன் காவல்துறை) கொண்டு வரப்பட்டுள்ளன. புதிய வெளியுறவு செயலாளர் ஓய்வு பெற்ற இராணுவ மனிதர் ஆவர்.

இராணுவமயமாக்கல் வேகம் பிடித்துள்ளது. ஆனால் இது இராசபச்ச குணாதிசயங்களைக் கொண்ட இராணுவமயமாக்கல் ஆகும். சிங்கள - பவுத்த மதகுருமார்கள் கருவியாகப் பயன்படுத்தப்படுவதைப் போலவே இராணுவமும் கருவியாக பயன்படுத்தப்படுகிறது. எல்லாவற்றையும் இராசபக்சாக்களே தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள்.

2005 - 2015 இடையிலான காலகட்டத்தில், இராசபக்சாக்கள் பல்வேறு ஒத்துழைப்பு / போட்டி முறையைப் பின்பற்றித் தங்களது சொந்த அதிகார மையங்களை உருவாக்கத் தொடங்கினர். நடந்து முடிந்த தேர்தலுக்குப் பின்னர் சகோதரங்கள் மற்றும் மகன்களிடையே அரசைப் பிரிக்கும் செயல்முறை மீண்டும் தொடங்கியுள்ளது. கோட்டாபய இராசபக்ச பாதுகாப்பைக் கட்டுப்படுத்துகிறார். பொருளாதாரம் நடைமுறையில் பசில் இராசபக்சவின் கட்டுப்பாட்டில் உள்ளது, இது 19 ஆவது திருத்தம் முடிந்தவுடன் முறைப்படுத்தப்படும். முன்னர் தருண்யதா ஹெடக் மற்றும் நில் பலகாயா ஆகியோரை மட்டுமே கொண்டிருந்த நாமல் இராசபக்ச இப்போது அதிகாரப்பூர்வமாக இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளார். சாமல் மற்றும் சீந்திர இராசபக்ச ஆகியோர் விவசாயத்தை கட்டுப்படுத்துகிறார்கள். மாத்தறை மாவட்ட மேம்பாட்டுப் பொறுப்பில் நிபுனா இரணவக்கா உள்ளார். குடும்பத்தின் பிடி முன்னை விட நீண்டும் பரந்தும் விரிந்துள்ளன.

இராசபச்சாக்களுக்கு அவர்களின் முன்னுரிமை எவை என்பது தெரியும். 19 ஆவது திருத்தத்திலிருந்து விடுபடுவது இலங்கையை ஒரு குடும்ப அரசாக மாற்றுவதற்குத் தேவையான முன்நிபந்தனையாகும்.

அந்த நடவடிக்கையை எதிர்ப்பது பாராளுமன்ற எதிர்ப்பை மட்டுமல்லாமல், கரு ஜெயசூரியா, மங்கள சமரவீர, சுனில் ஹண்டுநெத்தி மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா, தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் 47% இலங்கையர்களையும் உள்ளடக்கிய பரந்த கூட்டணியை உருவாக்க உதவும். 2019 இல் சஜித் பிரேமதாசாவுக்கு வாக்களித்தாவர்கள் அவர் நாங்கள் விரும்பிய சனாதிபதியாக இருந்ததால் அல்ல, மாறாக கோட்டாபய நாங்கள் விரும்பாத சனாதிபதியாக இருந்ததால்.

இராசபக்ச பேரலையைத் தோற்கடிக்க வேண்டும் என்றால் நாங்கள் ஒரு சுனாமி சுவரை எழுப்ப வேண்டும். அதற்கான வேலை 19 ஆவது திருத்தத்தைப் பாதுகாத்து 20 வது திருத்தத்தை எதிர்ப்பதன் மூலம் தொடங்க வேண்டும்.

# இவ்வார ராசிபலன்

**28-08-2020 வெள்ளி தொடக்கம் 03-09-2020 வியாழன் வரையும்**

**மேஷம்:** வேண்டாத நட்புக்கள் விலகி ஓடக்கூடிய வாரம். புது முயற்சிகள் பலன் அளிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழியில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: கைலாசநாதப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S

**ரிஷபம்:** கண்ணும் கருத்துமாக செயல்பட்டு பொன்னும் பொருளும் சேர்க்கக்கூடிய வாரம். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும்.பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும். பைரவ வழிபாட்டால் பாவம் தீரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அங்காள பரமேஸ்வர், அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K

**மிதுனம்:** வெறுப்புக்கள் விலகி பொறுப்புக்கள் சேரக்கூடிய வாரம். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். நோய் அகலும். பெயர், புகழ், கௌரவம், செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டமாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கனகதுக்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J

**கடகம்:** கலக்கமான சூழ்நிலைகள் விலகி இணக்கமான சூழ்நிலைகள் ஏற்படக்கூடிய வாரம். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை கூடும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும்.உற்சாகம் அதிகரிக்கும். திடீர் செலவு ஏற்படும். மங்கல செய்தியால் மனம் மகிழும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அய்யனார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R

**சிம்மம்:** துயரங்களை துடைத்தெறிந்து உயரங்களை சந்திக்கக்கூடிய உன்னதமான வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பேச்சில் கணிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அக்னிலிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V

**கன்னி:** நட்டமில்லாத நன்மைகளை சந்திக்கக்கூடிய வாரம். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன் பிறப்புகளால் உதவி கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். மேன்மையான நாள். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பட்டத்தரசியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F

**துலாம்:** பொறுமையை கடைப்பிடித்து பொறாமையை விரட்டியடிக்கக் கூடிய நாளாக உள்ள வாரம். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலை கட்டும். உறவினர் வருகை உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும். பணியில் உயர்வு கிட்டும். கஷ்டகாலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். விவேகமான வாரம். வெளியூர் பயணம் வெற்றி தரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஹேரம்ப கணபதி, அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q

**விருச்சிகம்:** உன்னதமான கிருபைகளும் உண்மையான நன்மைகளும் நடக்கக்கூடிய வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும் நாள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வீர அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M

**தனுசு:** முத்தாய்ப்பான முன்னேற்றங்களை சந்திக்கக்கூடிய வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஜலகண்டேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J

**மகரம்:** விருப்பங்கள் நிறைவேறி திருப்பங்கள் நடக்கக்கூடிய வாரம். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். எண்ணிய காரியம் கை கூடும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: தேவி செல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R

**கும்பம்:** பணவரவும் பாராட்டும் கிடைக்கக்கூடிய வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச்சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத் தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரித்து குடும்பம் ஒன்று சேரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மாங்கல்யேஷ்வரர், அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U

**மீனம்:** கண்ணியமான புண்ணியம் கிடைக்கக்கூடிய வாரம். மனம் மகிழும் நாள். உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள். திறமைகள் அதிகமாகும். இன்னல்கள் அகலும். கடன் தீரும். ஆக்கம் அதிகரிக்கும். பழைய பாக்கி வசூலாகும். வியாபாரத்தில் கவனம் தேவை. தன வரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். பழைய நட்பு பலன் தரும். உறவினரால் பாதகம் உண்டு.. உடல் நலனில் அக்கறை தேவை. உலோகத் தொழில் உயர்வு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அன்னமார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





Preparation of Income Taxes
T1 and T2 with E/File

Location :
Unit 9- 40 Winges Road
Woodbridge, ON
L4L 6B2

Pearl Fortune Canada
Head Office
101 Laird Drive, Markham,
Ontario L3S 3N6
Office Number 905-554-5606
Fax Number 905-554-3236


Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
416-332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 910



## மயூரபதி பத்திரகாளி அம்பாள் ஆலயம்
### - கொழும்பு -

உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான மக்கள் கொரோனா வைரசினால் பாதிக்கப்பட்டதோடு, பல இலட்சம் மக்கள் தமது இன்னுயிர்களை நீத்த நிலையில் அஞ்சி அஞ்சி வாழும் நிலை காணப்படுகின்றது. செய்வதறியாது அரசுகள் மக்களைக் காப்பாற்ற பல்வேறு வழிகளைக் கையாள்கின்றன. கனடாவில் வதியும் மக்கள் அரசின் வழிகாட்டல்களை ஏற்று பெருமளவு பாதிப்புக்களிலிருந்து தப்பி வாழ்கின்றனர். கனடிய அரசிற்கு அனைவரும் தலைவணங்குவோம். இதேவேளை ரொறன்ரோவில் வாழும் மக்கள் ஒன்ராரியோ தலைமையும், ரொரன்ரோவின் தலைமையும் காட்டும் வழியில் பயணித்து, பேரிழப்புக்களை தவிர்த்து வாழ்கின்றனர். வழிகாட்டிகயாகிய இவர்களுக்கும் நன்றி கூறுவதோடு தொடர்ந்தும் அன்றாடம் இவர்களால் வழங்கப்படும் நெறிமுறைகளையும் ஏற்று வாழ்வது அனைவரும் நலமே வாழ உதவும்.

உயிர்கொல்லி நோயாய் உலகெங்கும் பரவியுள்ள கொரோனா வைரசிலிருந்து தப்பி உயிர்வாழக் கையாள வேண்டியவை:

1. சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல்
2. முகக் கவசம் அணிதல்
3. கைகளை அடிக்கடி கழுவுதல்
4. தேவையற்று வெளியே செல்வதைத் தவிர்த்தல்
5. அரசின் ஆணையை ஏற்று வீட்டில் இருத்தல்

இந்த ஐந்து நெறிமுறைகளுமே உயிர்களைப் பலிகொள்ளும் கொரானா என்ற கொடிய வைரசை ஒழிக்க உதவும் நடைமுறைகளாகும். இந்த ஐந்து நடைமுறைகளையும் அனைவரும் பின்பற்றி நலமுடன் வாழ்வோம்.

நாமும் நலம்பெற்று, உலகமக்களும் நலமே வாழ, ஆத்மசுத்தியோடு இறைவனைப் பிரார்த்திப்போம். சிவவழிபாட்டிலே நோய் பிணி மற்றும் மரணத்தை வெல்லும் மந்திரமாக மகா ம்ருத்தும்ஜெய மந்திரம் கூறப்பட்டுள்ளது. இறைவனை வழிபடும்பொழுது தினமும் இந்த மந்திரத்தை ஒரு முறையோ அன்றி பலமுறையோ காலை, மாலை வேளைகளில் கூறி, இந்த உலகத்தைப் பீடித்துள்ள நோய் பிணி நீங்கி அனைவரும் நலம்பெற்று வாழ வேண்டும் என்ற வேண்டுதலை முன்வைத்து, இறைவனை வழிபடவேண்டும். நிச்சயம் பலன் கிடைக்கும்.

மகா ம்ருத்தும்ஜெய மந்திரம்

ஓம் த்ரியம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருஹமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முஷ்ய மாம்ருதாத்'
ஓம் நமச்சிவாய ஓம்நமச்சிவாய ஓம்நமச்சிவாய.


இம்மந்திரத்தை தினமும் ஓதுவதோடுநாமும் நலமடைந்து உலகமக்களும் நலமடைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள். இவ்வாறான பிரார்த்தனைகளால் பலனும் நலமும் பெற்றவர்கள் பலர்.

ஆரம்பகாலத்திலே வெள்ளவத்தை மயூராபிளேசிலே மட்டுமே நடைபெற்று வந்த அன்னை ஸ்ரீபத்திரகாளியின் பவனி, 1991 ஆம் ஆண்டு முதல் உறவ்லொக்வீதி, டிக்மன்ஸ்வீதி, காலி வீதி வழியாக உலா வந்து ஆலயத்தை வந்தடையும் வழக்கம் உருவாயிற்று. அன்னையின் இப்பவனியிலே இன, மத வேறுபாடின்றி ஆயிரக்கணக்கான அன்னையின் அடியவர்கள் கலந்துகொள்வது வழக்கமாகக் காணப்படுகின்றது.

அறங்காவலர். திருவாளர். பொ. வல்லிபுரம் அவர்களின் முயற்சியால் அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள், இந்து கலாச்சார மண்டபமொன்றினை அமைக்க ஆலயத்திற்கு இருபது பேர்ச் நிலத்தினை வழங்கியுள்ளார். இவ்வாறே ஏனைய மதத்தினைச் சார்ந்தோருக்கும் நிலம் வழங்கப்பட்டது. இந்நிலத்தில் அப்போதைய கொழும்பு மாநகரமேயர் திருவாளர் செ. கணேசலிங்கம் அவர்கள் அடிக்கல் நாட்ட !993 இல் கடைத்தொடருடன் கூடிய அடித்தளம் கட்டி முடிக்கப்பட்டு அமைச்சர் கௌரவ தொண்டமான் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பின்னர் 1994 இல் திருவாளர். இராமசாமி வீரவாகு என்பவர் 40 இலட்ச ரூபா செலவில், தன் தாயாரின் ஞாபகார்த்தமாக முதலாம் மாடியில் சுப்பம்மாள் கல்யாண மண்டபத்தினை அமைத்து, அதற்குரிய அனைத்துப் பொருட்களையும் வழங்கிப் பேருதவி புரிந்தார். ஆன்மீகப் பணிகளோடு சமூகப்பணிகளிலும் நாட்டங்கொண்டு 1988 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அறநெறிப் பாடசாலையை 1995 ஆம் ஆண்டு மண்டபத்தின் இரண்டாவது மாடியில் அமைத்தனர்.

இதே ஆண்டு திருவாளர். மனோ சின்னராசா என்பவரது உபயமாக அழகிய மணிக்கூட்டுக்கோபுரம் அமைக்கப்பட்டது. கன்னியாகுமரியிலிருந்து காசிவரையுள்ள அம்பாளின் திருவடிவங்களும், மற்றும் பல சிற்பங்களும் அமைந்த மிக அழகிய சிறிய மண்டபம் ஒன்று மூன்றாம் மாடியில் அமைக்கப்பட்டது. தொடர்ந்து நாலாவது மாடி அமைக்கப்பட்டு அது அடியார்களுக்குரிய தியான மண்டபமாக விளங்குகின்றது. 1993 ஆம் ஆண்டு மாசிமகப்பூசையின்போது. ஸ்ரீபத்திரகாளிஅன்னைக்குத் தேர் அமைப்பதற்கான அறிவித்தல் அறிவிக்கப்பட்டது. மாசிமகப்பூசையின் உபயகாரரும், வள்ளலுமான திரு.ஸ்ரீகாந்தா அவர்கள் 16 இலட்சம் ரூபா செலவில் அம்பாளுக்குரிய தேரினைச் செய்யும் முழுப்பொறுப்பினையும் ஏற்றுக்கொண்டார். இவ்வாறே திருவாளர். கேசுநாதன் என்பவர் விநாயகப்பெருமானுக்குரிய தேரினைச் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். முருகப்பெருமானுக்குரிய தேரினைச் செய்யும் பொறுப்பை பொதுமக்கள் ஏற்று, 36 இலட்ச ரூபா செலவில் தொண்ணூற்றி இரண்டு நாட்களில் செய்து முடித்தனர்.

*வளரும்...*



TORONTO ASTROLOGER & PSYCHIC
Pandit: ARJUN
9 TIMES MORE POWERFUL THAN OTHER ASTROLOGERS



VEDIC SOLUTIONS AVAILABLE FOR:
* Health * Education * Family * Job
* Marriage * Divorce * Love * Childless
* Business * Promotion * Husband-Wife Couples
* Lucky Numbers * Court Etc

REMOVES BLACK MAGIC & EVIL SPIRITS & GIVES 100% PROTECTION

No Person in the World is Without Problems. Meet the Pandit once and see your Future Changing for GOLDEN & BRIGHT FUTURE

100% Guarantee
He can perform Devi upasana Lakshmi Pooja Shanthi Pooja (Prayers) and all so protection from enemies and jealousy
PRIVATE & CONFIDENTIAL

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் Pandit: Arjun சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முக நாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்..!

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமைகளில் இலவசமாக நூல் கட்டப்படும்

- கைரேகை
- நாம சட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- பெண்பிள்ளைகள் - பெற்றார் பிரச்சனைகள்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- குழந்தைப் பாக்கியம்
- சர்ப்ப தோஷம்
- கர்ப்பதோஷம்
- கஸ்ட - நஸ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்று கூடுதல்

அகோரா சாமயாகளடம சென்று மந்துரங்கள கற்று கொண்ட ஓம பரகாஷ

2607 Eglinton Ave East, Scarborough ON, M1K 2S2
UPSTAIRS ERA SUPERMARKET , (BRIMLEY & EGLINTON)

Call: 416-722-9498

# MONEY PROBLEMS?™

ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்

## உங்களைக் கேளுங்கள்?



- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

**Scarborough / Downtown Toronto: 416-489-2000**

**Mississauga / Brampton: 416-650-5400**





| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E | 800-120 Eglinton Ave. E | 306-1280 Finch Ave. W | 110-93 Dundas Street E. | 201-7990 Kennedy Rd. South, |
| Scarborough, ON, M1S 1V3 | Toronto, ON, M4P 1E2 | North York, ON, M3J 3K6 | Mississauga, ON, L5A 1W7 | Brampton, Ontario, L6W 0B3 |

**Mark Shamly**
*Tamil Consultant*

*Proudly Served over 15,000 clients since 2004*

**Visit : GtaCredit.Com**

**Ajay Oberoi**
*Experienced Credit Counsellor*

# PRECONSTRUCTION CONDOS & TOWNHOUSES!

**Twelve Oaks Towns** – GreenCity Development Group Inc.

**Ivylea Towns** – Marlin Spring Development and Greybrook Realty Partners

**King East Estates** – Plazacorp Urban Residential Communities

**High Point Urban Towns** – Laurier Homes

**Horizons Modern Towns** – Chestnut Hill Developments

**Station 3 Condos** – Brookfield Residential

**The BoatWorks Towns** – Andrin Homes

**Landing Condos Whitby Harbour** – Carttera Private Equities

**JAC Condos** – Graywood Developments Ltd. and Phantom Developments

**181 East Condos** – Stafford Homes Ltd. and Greybrook Realty Partners

**Daniels Keelesdale Condos and Towns** – The Daniels Corporation

**Empire Quay House Condos** – Empire Communities

**199 Church Condos** – CentreCourt Developments Inc. and Parallax Development Corp.
Church St & Dundas St E, Toronto
$537,990 - $1,018,990 | 355 sq ft - 860 sq ft
VIP Sale NOW on

**Axess Condos** – Liberty Markets and Fieldgate Construction

**Universal City Condos 4** – Chestnut Hill Developments

**Bartley Towns** – Barla Inc

**Artsy Condos** – The Daniels Corporation

**Field House Towns** – The Daniels Corporation

**28 Eastern Condos** – Alberra Group

**Wenderly Park Towns** – Kaitlin Corporation

**Maxx Urban Towns 2** – VanMar Developments



**Bala Logendralingam**
REALTOR®

EXECUTIVE Award

100% Award

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562

info@balalogen.com

Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9

# அன்பின் தொனி - 575

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

### உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது

பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது. அவரே அதைக் கடல்களுக்கு மேலாக அஸ்தி பாரப்படுத்தி, அதை நதிகளுக்கு மேலாக ஸ்தாபித்தார். யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசு த்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்? கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்து மாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே. அவன் கர்த்தரால் ஆசீர்வா தத்தையும், தன் இரட்சிப்பின் தேவனால் நீதியையும் பெறுவான். இதுவே அவரைத் தேடி விசாரித்து, அவருடைய சமுகத்தை நாடுகிற யாக்கோபு என்னும் சந்ததி. வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள், அநாதி கதவுகளே, உயருங்கள், மக-மையின் ராஜா உட்பிரவேசிப்பார். யார் இந்த மகிமையின் ராஜா? அவர் வல்லமையும் பராக்கிரமமுமுள்ள கர்த்தர், அவர் யுத்த த்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே. வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள், அநாதி கதவு-களே, உயருங்கள், மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார். யார் இந்த மகிமை-மயின் ராஜா? அவர் சேனைகளின் கர்த்தரானவர், அவரே மகிமையின் ராஜா. **- சங்கீதம் 24: 1-10**

### உம்முடைய கிருபை என் கண்களுக்கு முன்பாக இருக்கிறது,

கர்த்தாவே, என்னை நியாயம் விசாரியும், நான் உத்தமத்திலே நடக்கிறேன், நான் கர்த்தரை நம்பியிருக்கிறேன், ஆகையால் நான் தள்ளாடுவதில்லை. கர்த்தாவே, என்னைப் பரீட்சித்து, என்னைச் சோதித்துப்பாரும், என் உள்ளிந்திரியங்களையும் என் இருதயத்தையும் புடமிட்டுப்பாரும். உம்முடைய கிருபை என் கண்களுக்கு முன்பாக இருக்கிறது, உம்முடைய சத்தியத் திலே நடந்துகொள்ளுகிறேன். வீணரோடே நான் உட்காரவில்லை, வஞ்சகரிடத்தில் நான் சேருவதில்லை. பொல்லாதவர் களின் கூட்டத்தைப் பகைக்கிறேன், துன்மார்க்கரோடே உட்காரேன். கர்த்தாவே, நான் துதியின் சத்தத்தை தொனிக்கப் பண்ணி, உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பதற்காக, நான் குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவி, உம்முடைய பீடத்தைச் சுற்றிவருகிறேன். கர்த்தாவே, உமது ஆலயமாகிய வாசஸ்தலத்தையும், உமது மகிமை தங்கிய ஸ்தா னத்தையும் வாஞ்சிக்கிறேன். என் ஆத்துமாவைப் பாவிகளோடும், என் ஜீவனை இரத்தப் பிரியரோடுங்கூட வாரிக்கொள்ளா தேயும். அவர்கள் கைகளிலே தீவினையிருக்கிறது, அவர்கள் வலதுகை பரிதானங்களால் நிறைந்திருக்கிறது. நானோ என் உத்தமத்திலே நடப்பேன், என்னை மீட்டுக்கொண்டு என்மேல் இரக்கமாயிரும். என் கால் செம்மையான இடத்திலே நிற்கிறது, சபைகளிலே நான் கர்த்தரைத் துதிப்பேன். **- சங்கீதம் 26: 1-12**

### கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?

கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்? என் சத்துருக்களும் என் பகைஞருமாகிய பொல்லாதவர்கள் என் மாம்சத்தைப் பட்சிக்க, என்னை நெருக்குகையில் அவர்களே இடறிவிழுந்தார்கள். எனக்கு விரோதமாக ஒரு பாளயமிறங்கினாலும், என் இருதயம் பயப்படாது, என் மேல் யுத்தம் எழும்பினாலும், இதிலே நான் நம்பிக்கையாயிருப்பேன். கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன், நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன். தீங்குநாளில் அவர் என் னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின் மேல் உயர்த்துவார். இப்பொழுது என் தலை என்னைச் சுற்றிலும் இருக்கிற என் சத்துருக்களுக்கு மேலாக உயர்த்தப் படும், அதினிமித்தம் அவருடைய கூடாரத்திலே நான் ஆனந்த பலிகளையிட்டு, கர்த்தரைப் பாடி, அவரைக் கீர்த்தனம் பண்ணுவேன். கர்த்தாவே, நான் கூப்பிடுகிற சத்தத்தை நீர் கேட்டு, எனக்கு இரங்கி, எனக்கு உத்தரவு அருளிச்செய்யும். என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே, உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே, என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று. உமது முகத்தை எனக்கு மறையாதேயும், நீர் கோபத்துடன் உமது அடியேனை விலக்கிப்போடா தேயும், நீரே எனக்குச் சகாயர், என் இரட்சிப்பின் தேவனே, என்னை நெகிழவிடாமலும் என்னைக் கைவிடாமலும் இரும். என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்ளுவார். கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதித்து, என் எதிராளிகளினிமித்தம் செவ்வையான பாதையில் என்னை நடத்தும். என் சத்துருக்களின் இஷ்டத்துக்கு என்னை ஒப்புக்கொடாதேயும், பொய்ச்சாட்சிகளும் ஆக்கிரமித்துச் சீறுகிறவர்களும் எனக்கு விரோத மாய் எழும்பியிருக்கிறார்கள். நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப்போயிருப்பேன். கர்த்தருக்குக் காத்திரு, அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார், திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு. **- சங்கீதம் 27: 1-14**

### கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறா

என் கன்மலையாகிய கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன், நீர் கேளாதவர்போல மவுனமாயிராதேயும், நீர் மவுன மாயிருந்தால் நான் குழியில் இறங்குகிறவர்களுக்கு ஒப்பாவேன். நான் உம்மை நோக்கிச் சத்தமிட்டு, உம்முடைய பரிசுத்த சந்நிதிக்கு நேராகக் கையெடுக்கையில், என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டருளும். அயலானுக்குச் சமாதான வாழ்த்துதலைச் சொல்லியும், தங்கள் இருதங்களில் பொல்லாப்பை வைத்திருக்கிற துன்மார்க்கரோடும் அக்கிரமக்காரரோடும் என்னை வாரிக்கொள்ளாதேயும். அவர்களுடைய கிரியைகளுக்கும் அவர்களுடைய நடத்தைகளின் பொல்லாங்குக்கும் தக்க தாக அவர்களுக்குச் செய்யும், அவர்கள் கைகளின் செய்கைக்குத்தக்கதாக அவர்களுக்கு அளியும், அவர்களுக்குச் சரிக்குச் சரிக்கட்டும். அவர்கள் கர்த்தருடைய செய்கைகளையும் அவர் கரத்தின் கிரியைகளையும் கவனியாதபடியால், அவர்க ளை இடித்துப்போடுவார், அவர்களைக் கட்டமாட்டார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவர் என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டார். **- சங்கீதம் 28: 1-6**

*தொடரும்...*

SIVA SAKTI ASTROLOGY PSYCHIC CENTER



PANDIT: KUMAR SWAMY



Most Powerful Spiritual Healer
We can Handle any Problem
25 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 8 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்
உலகத்தில் சூரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே
இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் குறுவார்
Remove Black Magic,Witchcraft, Obeya,Evil Spirits
Bad Luck & Jadoo & Give 100%,Life Long Protection
கை பார்த்து. முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். Photo பார்த்து
ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,
இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.
செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி,
நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம்,
காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக
தீர்வு சொல்லப்படும்
எந்தப் பிரச்னையாக இருந்தாலும் 9 நாட்களில் தீர்வு காண்பார்
100% SATISFACTION GUARANTEED
Are you depressed & Lonely? All Religions welcome. 100% Guaranteed Result
416-726-4474
2649 Eglinton Ave,East, Scarborough,M1K 2S2
Rasi Silk upstair, (Brimeley & Eglinton.)

# உடலால் பிரிந்தாலும் உறவால் இணைந்திருக்கும் உத்தமனார்!

## மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட அமரர் குணரட்ணம் கனகலிங்கம்

அவர்களின் மறைவு குறித்த 31வது நாள்

## நினைவு அஞ்சலி



மலர்வு: 11.02.1957

உதிர்வு: 30.07.2020

அன்புருவாய் எம்மை வைத்திருந்த தங்க திருவுருவே!
"நாம் இருவர் நமக்கு இருவர்" என தன் மக்களுடன் மருமகள் பேரன் என சிறப்போடு பட்டங்கள் பல முடித்து, தொழில்களைச் செய்து, தாய்போல் அன்போடு அரவணைத்து, அமுத உணவளித்து, தாய்மொழி வளங்கள் காட்டி நீங்கள் எங்களை விட்டுப்பிரிய காலனுக்கு நாம் செய்த கொடுமைதான் என்ன?

கருணை மழை பொழிந்து குட்டி, குஞ்சு, பிள்ளை, பகா என அழைத்து "என் கடமைகளை நானே செய்வேன்" என உறுதிமொழி கூறிவிட்டு ஏன் பிரிந்தாய் அன்பே?

காலையில் நாம் எழுந்து வரும்போது அன்பு குரலோசை கேட்டு நடந்து வந்து உங்கள் நிழலிலே உணவிட்டுப் பார்க்கின்றேன் அப்பா! நீங்கள் உண்ணவில்லை என பதைபதைத்து கண்ணீர் பூக்களை காணிக்கை ஆக்குகிறேன்!

பெரியண்ணா பெரியண்ணி, சின்னண்ணா சின்னண்ணி என ஊர் வந்த கதைகளை அழகாக கூறி மகிழ தம்பி என்று அழைப்பதற்கு யார் இருக்கின்றார்கள்? இறைவா என் தம்பியை ஏன் எடுத்தாய் என்று அல்லும் பகலும் அழுது புலம்புகிறார்கள். மருமக்கள் பேரப்பிள்ளைகள் உடனும் மாமி மச்சான் என உறவாடி மகிழ்ந்து அவர்கள் எல்லோரும் இன்று வானத்தைப் பார்த்து அழுது புலம்பு கிறார்கள். அப்பா அதை ஏற்றுக்கொண்டு திரும்பிடுவாய் என் மடியில்.

அருமையான சொந்த பந்தம் மாமா மாமா என்று அன்பாக அழைத்தது ஆண்டவா உனக்கு பொறுக்கவில்லை என்று மருமக்கள் புலம்புகிறார்கள்

எமது சங்கத்திற்கு ஓடியோடி உதவினாயே!
உம்மைப்போல் ஒரு பிறப்பு ஒன்றும் கிடையாது. பாசத்தில் பிறந்தாயே நண்பா! நம் உயிர் உள்ளவரை உம்மை மறவோம்.

உணர்வோடு வாழ்வோம் அப்பா! உன் புன்சிரிப்புடன் எல்லாவற்றையும் பார்க்கும்போது உன் கைகளால் உண்ட உணவை நிலையற்ற வாழ்வில் நாம் நிலையாக பெறமாட்டோம் என்று நினைக்கும்போது நெஞ்சு வெடிக்கிறது அப்பா.

எமது நினைவுகளை உங்கள் பாதங்களில் காணிக்கையாக்குகிறோம். உங்களின் ஆத்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகிறோம்.

திருமதி கனகலிங்கம்கம் 905-472-7698
கணேசலிங்கம் 416-504-2449 அமுதலிங்கம் 416-491-0605

### நன்றி நவில்கின்றோம்...

இறைவன் திருவடி நிழலில் கலந்த எமது குடும்ப தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு இல்லத்திற்கு நேரில் வந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும்

தொலைபேசி மூலமும் மின்னஞ்சல் மூலமும் தொடர்பு கொண்டு எமது துக்கத்தில் பங்கு கொண்டு அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும்

மரணச் சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும்
தமிழ்த் திருமுறைகள் பாடியவர்களுக்கும் மற்றும் அந்தணப் பெருமக்களுக்கும்

அந்தியேட்டி, வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளில் பங்கு கொண்டவர்களுக்கும்

கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டோருக்கும்
மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும்
அஞ்சலி உரைகளை நிகழ்த்தியோருக்கும்

தேவையான போதெல்லாம் உதவி ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமுவந்த நன்றிகள்.

Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
iNFORCE LIFe Financial Services Inc.

RESP
Registered Education Saving Plans
40% - 20%
Goverment Grant
Plus additional
15-10% on us.
Start Saving Early

Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing

UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
On 12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1
PARK PLAZA (BETWEEN LAWRENCE & EGLINTON)
TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1273 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 28, 2020

# பாடசாலைகளை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாக ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் மாகாண சபை உறுப்பினர்களோடு ஆலோசனை






ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர அமைச்சர் ஸ்டீபன் லெச்சே அவர்கள் நேற்று வியாழக்கிழமையன்று, ஸ்காபரோ சுகாதாரக் கட்டமைப்பின் சுகாதார நிபுணர்களுடன் இணைந்து சட்டமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம், மாகாண அமைச்சர் ரேமண்ட் சோ, சட்டமன்ற உறுப்பினர்களாகிய கிறிஸ்டினா மிடாஸ், அரிஸ் பாபிகியன் ஆகியோர் சகி-தம் , மாணவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும், பாடாசாலை ஊழியர்களுக்கும் நோய்த்தொற்றுப் பாதிப்புகள் ஏற்படாமல் பாதுகாப்பான முறையில் பாடசாலைகளை திறப்பதை எவ்வாறு உறுதிப்படுத்த முடியும் என்பது பற்றி கலந்துரையாடினர்.

அங்கு உரையாற்றிய கல்வி அமைச்சர் தனது உரையில்
“எமது அரசாங்கம் பள்ளிகளில் கொவிட்-19 மேலாண்மைக்கான செயற்பாட்டு வழிமுறை ஒன்றை வெளியிட்டுள்ளது. இவ்வழிமுறையானது ஒன்ராறியோவின் சுகாதார தலைமை மருத்துவ அதிகாரி உட்பட பொது சுகாதார நிபுணர்களுடன் கலந்தாலோசித்து உருவாக்கப்பட்டுள்ளதுடன், பாடசாலைகள் கொவிட்-19 தொற்றுகளை அடையாளங்கண்டு, தொற்றுக்குள்ளானவர்களைத் தனிமைப்படுத்தவும், பாடசாலைகளில் நோய்த்தொற்றுப் பரவுவதைக் கட்டுப்படுத்தவும் உதவியாக அமையும். கனடிய மத்திய அரச தனது அறிவிப்பினூடாக ஒன்றாறியோவிற்கு 381 மில்லியன் டொலர்களை வழங்குகிறது. இந் நிதியானது ஒன்றாறியோ மானில அரசினால் மீளவும் பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு ஆதரவான திட்டங்களுக்காக வழங்கப்பட்ட 900 மில்லியன் டொலர்களைவிட மேலதிக உதவித் தொகையாக அமையும். இந்நிதி மானில அரசால் மேற்கொள்ளப்படும் பின்வரும் பல முக்கிய முயற்சிகளுக்கு உதவியாக விளங்கும்:

· பாடசாலைகளை மீளத் திறக்கும்போது கூடுதல் பாதுகாவலர்களை பணியமர்த்தல், பள்ளிகளில் உள்ளக தட்பவெப்ப நிலை மற்றும் வளி மறுசுழற்சி போன்றவற்றுக்கான செலவுகள், மாணவர்களுக்கான இணைய சேவை, நோய்த்தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கு வேண்டிய தனிநபர் பாதுகாப்பு கருவிகள், மேலதிக தேவைக்கேற்ப கல்வியாளர்களை தற்காலிகமாக பணியமர்த்தல் உள்ளிட்ட எமது திட்டத்தை நிறைவுசெய்வதற்காக 200 மில்லியன் டொலர்களும்,
· அதிகப்படியான வாகன ஓட்டுனர்களை வைத்திருக்கவும், பாடசாலை பேருந்து பாதைகள், பேருந்தில் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது போன்றவற்றுக்கு உதவியாக 70 மில்லியன் டொலர்களும்,
மாணவர்களுக்கு உளநல ஆதரவினை வழங்குவதற்கு சிறப்பு கல்வி மற்றும் உளநலத்துறையில் தேர்ச்சிபெற்ற ஊழியர்களை பள்ளி நிர்வாகம் பணிக்கமர்த்தவும், பயிற்சியளிக்கவும் உதவும்பொருட்டு 12 மில்லியன் டொலர்களும்,
கோவிட்-19 நோய்த்தொற்றினைக் கையாள்வதற்கென பள்ளிகளுக்கு உதவுவதற்காக மாகாணத்தில் உள்ள பொது சுகாதார பிரிவுகளில் கூடுதலாக 125 பராமரிப்பாளர்கள் பதவிகளை உருவாக்குவதற்கு 12 மில்லியன் டொலர்களும்,
இணையவழிக் கற்றலை கற்றலை வழங்கும் அனைத்து நிலைகளிலுமுள்ள ஒவ்வொரு பள்ளி நிர்வாகமும் அவற்றுக்கான இணையவழி கற்றலுக்கான ஆதரவை வழங்குவதை உறுதிப்படுத்த 36 மில்லியன் டொலர்களும் வழங்கப்படும்.” என்றார்.
ஏனைய உறுப்பினர்களும் அங்கு உரையாற்றினர்.

# புங்குடுதீவு பெரியபுலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய புனர் நிர்மாண பணிகளில் பங்கெடுத்த கனடா வாழ் சித்திரக் கலைஞர்களுக்கு கௌரவம்





யாழ்ப்பாணம், புங்குடுதீவு பெரியபுலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய புனர் நிர்மாண பணிகளில் நேரடியாக ஈடுபட்ட கனடா வாழ் சித்திரக் கலைஞர்களான சோமசுந்தரம் பாலகெங்காதரதிலக் மற்றும் சோமசுந்தரம் ரவீந்திரநாதாகூர் ஆகியோரைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று மதியம் ஸ்காபுறோவில் அமைந்துள்ள ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது.
முதலில் நடைபெற்ற அபிசேகங்கள் மற்றும் விசேட பூசைகளைத் தொடர்ந்து மேற்படி ஆலயத்திற்கு கனடாவிலிருந்து சென்று அங்கு தேவையான வர்ணம் தீட்டும் வேலைகளை சிறப்பாகச் செய்த கலைஞர்கள் மற்றும் ஸ்தபதிகளுக்கான கௌரவம் இடம்பெற்றது.
புங்குடுதீவின் சிறுப்பிட்டி வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவர்கள் மற்றும் ஏனைய வட்டாரங்களைச் சேர்ந்தவர்கள் என நூற்றுக்கணக்கான அடியார்கள் அங்கு கலந்து சிறப்பித்தனர். இங்கு காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.



# தொழிலதிபர்கள் ‘செல்வா’ குடும்பமும் ‘செல்வம்’ குடும்பமும் கனடாவில் அவர்களது இல்லத் திருமணம் ஒன்றால் இணைந்தன.



தொழில்திபர்கள் செல்வா வெற்றிவேல் மற்றும் செல்வம் கிருஸ்ணசாமி ஆகியோரின் பிள்ளைச் செல்வங்கள் முறையே ஹெய்லா மற்றும் கண்ணன் ஆகியோர் மண வாழ்வில் இணைந்த இனிய திருமண வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் சிறப்பாக நடைபெற்றது.
அழைக்கப்பெற்றவர்கள் அனைவருமே மணமக்களை வாழ்த்தியும் மனது நிறைந்தும் இல்லம் ஏகினர்.
தம்பதிகளை நாமும் வாழ்த்துவோமாக!!